திராவிடன்

ஆசிரியர் : என். வி. நடராசன்

[illegible] : 8 22-4-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா மலர் : 37

தி.மு.க. பொதுக்குழு கூட்ட அழைப்பு

அன்புடையீர், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் 24—4—55 ஞாயிறு காலை 10-மணிக்கு சென்னை, வண்ணாரப்பேட்டை தியாகராயர் கல்லூரியில் நடைபெறும். அது போது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்

1. பொதுச்செயலாளர் தேர்தல்,
2. மாநில மாநாட்டுக்கு வரவேற்புக் குழு அமைத்தல்.

அன்பன்

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்த நாள் : 17-4-1891

'ஒரே ஒரு கவிஞன்'

ஆம்; ஒரே ஒரு சூரியன்; ஒரே ஒரு நிலவு; ஒரே ஒரு புத்தர்; ஒரே ஒரு இயேசு; ஒரே ஒரு சாக்ரடீசு; ஒரே ஒரு பெரியார்; ஒரே ஒரு அண்ணா.

அஃதே போன்று ஒரே ஒரு கவிஞன்—பாரதிதாசன். "ஒரே ஒரு" என்னுஞ் சிறப்புச் சொற்கள் எவ்வளவு புகழைத் தருகின்றன!

ஒரே ஒரு சூரியன்!

உலகத்துக் கெல்லாம் ஒளி தருகிறது. அந்த நேரத்தைப் பகல் என்கின்றோம்; பாடுபடுகின்றோம்; பலனடைகின்றோம். இன்னுங் கூறப் புகின், சூரியனுடைய ஒளிக் கதிரினின்று பலவித விஞ்ஞான விளைவுகளைப் பெறுகின்றோம்.

கதிரவன் ஏழையர் பால் கருணைமிக் குடையோன். அதனாற்றான், "ஏ! பணம் பெருத்தானே! இதோ, இந்தப் பாட்டாளியைப் பார். என் 'நிழ'லில் பாடுபடும் அந்தப் பாமரனைப் பார். அவன் உடலினின்று கொட்டுகின்ற வியர்வைத் துளிகளைப் பார். அவற்றிலேனும் உன்னுடைய கொடிய உள்ளம் தெரிகின்றதா பார். கண்களினின்று நீர் சிந்தினால் உன்மனங் கரையாது என்று கருதித்தான் உடல் முழுவதினின்றும் நீரைக் கொட்டிக் காண்பிக்கிறான். அப்போது உன் இரு கண்களினின்று ஒரு சொட்டுக் கண்ணீரேனும் சிந்தவில்லையெனில் நீ உண்மையிலேயே பணத்திமிர் பிடித்தவன்தான்; பாவிதான்; படாடோப வாழ்வுக்காரன்தான். நீ ஒன்றை மட்டும் உணர வேண்டும். இதே போக்கு நீடித்தால்......" இங்ஙனம் எச்சரிக்கை விடுவதைப் போன்று எரிகின்றான். அதனாற்றான் "ஒரே ஒரு சூரியன்" அவனுக்கிணை அவனேதான் என்கின்றோம்.

ஒரே ஒரு நிலவு

நினைத்தாலே நெஞ்சு குளிர்கிறது. அனைவருக்கும். நிலவைக் கண்டவுடனே, குழந்தை கைநீட்டிக் கூப்பிடுகிறது; சிறுவர் சிறுமியர் 'நிலாச்சோறு' சமைத்துச் சாப்பிடுகின்றனர். வெகு தூரம் பயணம் செய்ய வேண்டிய மாட்டு வண்டிக்காரரோ, நடை வண்டிக்காரரோ 'நிலவு புறப்பட்டதும் நாமும் புறப்படலாம்' என்பர்; அவ்வளவு நம்பிக்கை.

அவளுடைய ஆட்சியில் பொருளைக் கொள்ளையிடும் கள்ளர்கள் தயங்குகின்றனர், 'எங்கே காட்டிக் கொடுத்து விடுவாளோ?' என்ற அச்சத்தால். ஆனால், உள்ளத்தைக் கொள்ளையிடும் காதற் கொள்ளையரோ உணர்ச்சி வயப்பட்டு மயங்குகின்றனர்.

நிலவுக்குக் காதலிகள்பால் ஏன்தான் அவ்வளவு கோபமோ தெரியவில்லை. ஒருவேளை...அழகு என்றால், தான் தான் என்று நினைத்திருந்த நிலவுக்குப் போட்டியாகக் காதலியரின் முகத்தை அவளுக்கு ஒப்பிட்டால் கோபம் வரத்தான் செய்யும். அதனாற்றான். தென்றலை அனுப்பி அவர்களைப் படாதபாடு படுத்தித் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்கிறாள் போலும்! ஆனால் அதில்தான் எவ்வளவு இன்பம்!

பலதிறப்பட்ட மக்களும் நிலவு என்றால் அதில் ஒரு நிம்மதியைக் கண்டே தீர்கிறார்கள். ஆகவே, நிலவுக்கிணை நிலவேதான்.

ஒரே ஒரு புத்தர்!

அன்றுதான் அவர் கண்டார், மனிதர்கள் கூட நோயால் வருந்துகின்றனர்; வறுமையால் வாடுகின்றனர். ஏன்—இறந்தே விடுகின்றனர் என்பதை. அவ்வளவு செல்வர்க்காகத் துன்பம் இன்னதென்பதையே அறியாத நிலைமையில் வளர்ந்தவர்; வாழ்ந்தவர்—ஒரு குழந்தைக்குத் தந்தையாகும் வரையில், பிறகு எல்லாம் அறிந்தார்; எல்லாம் துறந்தார். மரத்தடிவாசியானார்; மக்களின் வழிகாட்டியானார். "இன்னா செய்யாதீர்!" என்று இறைஞ்சினார் மக்களை. ஆசியாவின் ஒளியானார். அவருக்கிணை அவரேயானார்.

ஒரே ஒரு இயேசு!

"சினங்காக்க. யாரேனும் சினந்து ஒரு கன்னத்தில் அறைந்தாலும் இன்னொரு கன்னத்தையுங் காட்டுக. ஒரே பரம பிதா" என்றார். அதற்காகவே இரத்தம் சிந்தினார். உயிரைக் காணிக்கையாக்கினார். கருணையே உருவானவர். "பகைவனுக்கும் அருள்!" என்று 'பரமண்டலத்துக்கு அப்பால் உள்ள கர்த்தனை வேண்டியவர் எனப் போற்றப் படுகிறார்.

ஒரே ஒரு சாக்ரடீசு!

"இளைஞனே! ஏன் என்று கேள்; அஞ்சாதே!" என்றார். அதே குற்றத்திற்காக நஞ்சைப் பரிசாக ஏற்றார். 'கேள்வி கேள்' எனத் தூண்டிக் கேள்விக்குறிகளையே நாட்டுக்கு வழங்கிய வள்ளல்—ஒரே ஒரு ஆராய்ச்சி அறிஞன்.

ஒரே ஒரு காந்தி! நாம் விளக்கவே தேவையில்லை; நம் கண் முன்னாலேயே நாம் கண்டோம்.

ஒரே ஒரு பெரியார்!

பகுத்தறிவுப் பழம்; பார்ப்பார்க்குக் கிழம்; என்றுமே தொண்டு புரிந்து கொண்டேயிருக்கும் 'பேரிளம் தொண்டன்'

ஒரே ஒரு அண்ணா!

மூன்றே எழுத்துக்களில் புரட்சிக் கொடி நாட்டிய முதல்வன்.

"அண்ணா" முத்தமிழ் நாடு கண்ட மூன்றெழுத்து அறிஞன்.

"கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" இந்த **மூன்று** கொள்கைகளைத்தான் முன்வைத்தார், லட்சியத்தில் வெற்றிபெற — அதுதான் **தி. மு. க.**

எழுத்திலே புரட்சி செய்த ஒரே ஒரு செல்லேருழவன்.

'அண்ணா' என்று சொன்னால் போதும் யார் என்று எளிதிலேயே புரிந்து கொள்வர்.

அதேபோல ....
ஒரே ஒரு கவிஞன்!

புதுமைக் கவிஞன்; புரட்சிக் கவிஞன்; பாரதிதாசன். கவியிலே, கவியின் நடையிலே; பொருளிலே, பொருளின் நயத்திலே; கருத்திலே. கருத்தின் ஆழத்திலே; இசையிலே, இசையின் இனிமையிலே எல்லாவற்றிலுமே புரட்சியைச் செய்து காட்டிய ஒரே ஒரு கவிஞன் பாரதிதாசன்.

"இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே!"

இங்ஙனம் இன்றைய உலகத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டி, அதன் உள்ளே இருப்பவன் யார் என்பதையும் தெளிவு படுத்த வேறு யார் துணிந்தார்கள்?

இவ்வுலகம் இன்று இருளிலே மூழ்கிக் கிடக்கிறது; அந்த இருளிலிருந்து உலகத்தை வெளியே எடுக்க ஒரு 'வராகவதாரம்' தேவைப்படவில்லை யின்று. ஆனால், அந்த இருட்டிலிருந்து உலகை விடுவிப்பது மட்டுமல்ல; இருட்டே இல்லாமல் செய்து காட்ட ஒரு வீரர் பட்டாளத்தையே உருவாக்கிய உன்னத மனிதன் நம் புரட்சிக் கவிஞன்.

சாதி இருக்கின்றதென்று கூறும் மனிதன் ஒரே சாதியையா குறிப்பிடுகின்றான்? இல்லை யில்லை; இதோ கவிஞரே கூறுகிறார் கேளுங்கள்!

'வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள் என்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்
ஆகையால் எல்லோரும் அங்கே தனித்தனிதான்'

தனித்தனியாக—ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு சாதியாக இருக்கின்ற கீழ் நிலை, யாரால் ஏற்பட்டது என்பதையும் அவரே கூறுகிறார். செவிமடுங்கள்!

'பேதம் வளர்க்கப் பெரும்பெரும் புராணங்கள்!
சாதிச்சண்டை வளர்க்கத் தக்கஇதி காசங்கள்!
கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்
கொட்டியளக்கச் சுருக்கள் கணக்கற்றோர்
தேன் சுரக்கப் பேசி இந்து தேசத்தைத்
[தின்னுதற்கு
வான் சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்'

இப்போதாவது புரிந்ததா. மக்கள் ஏன் இவ்வாறு மதியிழந்து. மானந்துறந்து 'மண்ணாங்கட்டி'களாகத் தோற்றமளிக்கின்றனர் என்பது?

ஆகவேதான் கூடவே எச்சரிக்கையும் விடுக்கின்றார். ஆண்டவ முதலாளிகளுக்கும் அரசாங்க முதலாளிகளுக்கும், கேள்விக் குறிகளாய் குனிந்திருந்த மக்கள் இன்று நிமிர்ந்து நிற்கும் ஆச்சரியக் குறிகளாகமாறி விட்டார்களே என்று அதிர்ச்சியடையும் ஆணவக்காரர்களே! அதே ஆச்சரிய குறிகள் நாளடைவில் குறுகிக் குறுகிப் பலம் பெருகிப்பெருகி உங்கள் அட்டகாசங்களுக்கு வைக்கப்படும் முற்றுப்புள்ளிகளாகவே மாறவிருக்கின்றன என்பதையும் உணருங்கள் என்கின்றார் ஏன் தெரியுமா?

"சித்தாரும் வரப்படுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின்
[தோள்கள்!
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடுக்கிய மூச்செவரின் மூச்சு!"

என்பவற்றையெல்லாம் புரிந்து கொண்டார்கள் மக்கள் என்கின்றார். எப்படியென்கிறீரா? இப்படித்தான்.

"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
வெற்றித் தோள்கள் [தோளெங்கள்
கங்கைபோல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறுமுள்
எங்கள் உள்ளம் [ளம்
வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ் செய்கின்ற தமிழ்
எங்கள் மூச்சாம்."

என்று முழக்கமிடுகின்றார்; முரசு கொட்டுகின்றார்: முன்னேற்றப் பாதை இதோ, அதில் முதலிலே உன் கால்களை வை, என்கிறார்.

திராவிட இளைஞர்களைத் திரட்டித் தீந்தமிழ்த் தேனமுதைச் சுவைக்கத் தென்றல் இசைபாடும் இலக்கியச் சோலைக்கு இட்டுச் சென்ற பெருமை நம் பாரதிதாசனைத்தான் சேரும்.

வீரத்தை ஊட்டுவதிலேமட்டும் புரட்சி செய்யவில்லை, கவி: காதலை மூட்டுவதிலும் தம் புரட்சியை நிலைநாட்டி விடுகிறார். இதோ! காதலியின் வயப்பட்ட காதலனின் தன்மையைப் பாருங்கள்!

"கிட்டரிய காதற் கிழத்தியிடும் வேலை

12-ம் பக்கம்

Bleed through

சுவைத்துப்பாரீர்!

பிரகஸ்பதி பேசுகிறார்!

இம்மண்ணுலகை விட சிறந்ததொரு உலகம் வேறு கிடையாது! மோட்சம், நரகம் என்பதெல்லாம் கடைந்தெடுத்த பித்தலாட்டப் பேச்சு! உலகில் நிலவி நம்மையெல்லாம் ஆட்டிப் படைப்பதாகக் கருதப்படும் கடவுள்களெல்லாம் எத்தர்களின் கற்பனைச் சரக்குகளே! அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதெல்லாம் தன்னம்பிக்கை அற்றோரின் அசட்டுப் பேச்சு!

ஒரு மனிதன் இறக்கிறான். இறந்துபட்ட உடல் எரிக்கப்பட்டு சாம்பலாகி விடுகிறது. அப்படி சாம்பலான உடல் எங்ஙனம் மறு பிறப்பெய்தி வாழ முடியும்?

ஐதீகம், ஆச்சாரம் ஆராதனை, பிரார்த்தனை என்பவைகளெல்லாம் மதக் குருக்களெனப்போர், உடலுழைப்பு இல்லாமல் உண்டு கொழுத்து வாழ வழிவகை செய்து வைத்துக் கொண்ட வயிற்றுப் பிழைப்புச் சாதனங்களேயாகும்.

கடவுளுக்குப் பலியாகக் கொடுக்கப் படுகிற ஆடு, கோழி, பன்றி போன்ற மிருகங்களெல்லாம் நேரே மோட்சலோகம் அடைகிறதாக நம்புகிறவர்கள், ஏன் அவரவர்களுடைய தகப்பன்மார்களையும் தாய்மார்களையும் பலி கொடுத்து நேரே மோட்சலோகத்துக்கு அனுப்பக் கூடாது?

இங்கிருக்கிற புரோகிதனுக்குக் கொடுக்கிற அரிசி, பருப்பு, காய்கறி வகைகளைத் தும் இறந்துபோனவர்களுக்குப் போய்ச் சேரும் என்று நம்புகிறவர்கள், தாம் மேற்கொள்ளும் வேற்றூர் பிரயாணத்தின் போதும், தமக்கு வேண்டிய பண்டங்கள் அத்தனையும், அப்புரோகிதனிடமே கொடுத்துவிட்டு, பிறகு அவை யெல்லாம் தம்மைவந்து நாடி விடுமென்று ஏன் நம்புவதில்லை. நம்பி ஏன் வெறுங் கையோடு பிரயாணங்களை மேற்கொள்வதுமில்லை? சிந்தித்துப் பார்! சித்தந்தெளி!

பகுத்தறிந்து பாரடா தோழா!
உண்மையுணர்ந்து வாழடா தோழா!

கதர்க் குல்லாய் தர்பார்!

அன்று நன்றாகச் சொன்னார் நேரு; குல்லாய்க்கு அடியில் மூளை இருக்க வேண்டும். அஃதில்லாதபோது குல்லாய் எதற்கு? என்று!

விட்டல் என்பார் ஓர் ஏழைத் தொழிலாளி! நாகபுரி நகராட்சி மன்றத்தில் கையாளாக அதாவது எடுபிடி பணியாளராக வேலை பார்த்து வந்தவர் நடிகவேள் ராதா மொழியில் அவர் ஓர் "சர்—வண்டு" ஆங்கிலமொழியில் "பியூன்"

அவர் ஓர் நாள் தனது தலைமை அதிகாரி ஒருவரிடம், செக்குகளுக்கெல்லாம் கையெழுத்து வாங்கச்சென்றார். வேலையாள் தலையில் குல்லாய் இல்லாததைக் கண்டு வெகுண்டெழுந்தார்! எங்கே குல்லாய் என அதட்டினார்! ஏனப்பா குல்லாயில்லாது அவரிடம் செல்கிறாய்? அதிகாரியை அவமானப் படுத்தும்படியாக இருக்கிறதே உனது செய்கை என மற்ற ஒரு குட்டி அதிகாரி புத்தி புகன்றார். உடனே ஓடோடி "இரவல் குல்லாய்" ஒன்றை அணிந்துக் கொண்டு மீண்டும் அதிகாரியிடம் செக்குகளுக்கு கையெழுத்து வாங்கச் சென்றார்.

'டூ லேட்!' வண்டி ஸ்டேஷனை விட்டு நகர்ந்து விட்டது!

விட்டலுடைய சீட்டு கிழிக்கப்பட்டது! மறுஅப்பீலே கிடையாது. வேலை யிழந்தார் விட்டல்! வேலை யில்லாதார் பட்டாளத்தில் தாமும் ஓர் அங்கத்தினராகிவிட்டார்!

அடடா கதர்க்குல்லாய் தர்பாரே! கிழிந்த ஜிப்பாவோடு பெரிய பெரிய மந்திரி வேலைகளெல்லாம் கூட பார்க்கிற இந்தக் காலத்திலும் இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடக்கத்தான் நடக்கின்றன, என்று நாகபுரியிலிருந்து வரும் யு. பி. ஐ. செய்தி ஊர்ஜிதப் படுத்துகிறது.

அது கிடக்கட்டும்! நேரு கூறினாரே: குல்லாயிற்கடியில் மூளை இருக்க வேண்டுமென்று, அதை மேலே குறிப்பிட்ட செய்தியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதில் யாருக்கு மூளையில்லை? வேலையைவிட்டு நீக்கிய அதிகாரிக்கா? அல்லது வேலையிழந்த ஏழை தொழிலாளி விட்டலுக்கா? என்பது என்னமோ புரியாத புதிராகத்தானிருக்கிறது! எதற்கும் போட்டு வைப்போம் "ஜெய்ஹிந்த்!" ஒன்றை. ஜெய்ஹிந்த்!

"இந்துவாக சாக மாட்டேன்!"

"பிறக்கும்போது இந்துவாகப் பிறந்தாலும், இறக்கும்போதும் இந்துவாகவே இறக்க விருப்பப்பட மாட்டேன்" என்று **அம்பேத்கார்** அன்றே விரதம் பூண்டுவிட்டார்!

புத்தர் பிறந்த 2500-வது ஆண்டுவிழா சமீபத்தில் நடக்க இருக்கிறது. அதுபோது டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களும் அவரது மனைவியாரும் புத்த மதத்தைத் தழுவத் தீர்மானித்து விட்டார்கள்.

இந்த அவரது முடிவை முன்னதாகவே உத்தர பிரதேசம், சாரநாத் என்னும் ஊரிலுள்ள மகாபோதி சங்கத்தின் செயலாளருக்கு அறிவிப்புத் தந்து விட்டார். இச்சாரநாத்தில்தான் முதன்முதலாக புத்தர்பிரான் தம் கொள்கைகளைப் பரப்ப முற்பட்டார்.

புத்த மதத்தைத் தழுவும் வைபவத்தை சாரநாத்திலேயே கொண்டாட வேண்டுமென்பது அம்பேத்காரின் ஆசை! ஆனால் நண்பர்கள் அவ்வைபவத்தை பம்பாயில் வைத்துக் கொள்ளுமாறு தூண்டுகிறார்கள்.

ஆக, அம்பேத்கார் தம் வாக்கின்படி இந்து மதத்திற்கு முழுக்குப் போட்டுவிட்டு புத்த "ஞானஸ்நானம்" பெறப் போகிறார் என்பது நிச்சயமாகிறது! இறக்கும்போது (அவர் நீடூழி வாழட்டும்) புத்த பிக்ஷுவாகவே இறப்பார்!

நியூயார்க்கில் முகம்மது நபி!

உருவ வழிபாடு அறவே கூடாதென வெறுத்தவர் முகம்மது நபி அவர்கள். அங்ஙனமே, இஸ்லாம், உருவ வணக்கத்தை ஒழித்துக் கட்டியது!

ஆனால் நியூயார்க் (அமெரிக்கா) நீதி மன்ற உருவச்சிலை மேடையில் உலகத்துக்கு நீதி வழங்கிய உத்தமர்கள் பதின்மரின் உருவச் சிலைகளை வடித்து வைத்திருந்தார்கள்.

முகம்மது நபி, மனு, மோஸஸ்; கன்ஃபூஷியஸ், ஜொராஸ்டர், ஜஸ்டினியன் சக்ரவர்த்தி, ஸ்பார்ட்டாவின் லைகர்கஸ், ஏதென்ஸின் சலான், ஆல்ஃபிரட் மகாராஜா, பிரான்சு நாட்டின் ஒன்பதாவது லூயி— ஆகியோர்களே அப்பதின்மர்கள்.

இப்பதின்மரின் உருவச்சிலைகள் கடந்த 52 ஆண்டுகளாகவே இருந்து வருகின்றன. 1953-ம் ஆண்டு அவைகளைப் புதுப்பிக்கமுற்பட்டபோதுதான் **முகம்மது நபி** அவர்களின் சிலையும் இருக்கிறதென்று, பாக்கிஸ்தான், இந்தோனீஷியா, எகிப்து ஆகிய மூன்று இஸ்லாமிய நாடுகளுக்கும் தெரிய வந்ததாம். நபி அவர்கள் உருவ வழிபாட்டை வெறுத்தவராதலால் அவரது சிலையை உடைத்தெறியும்படி நியூயார்க் நீதிமன்றத்தைக் கேட்டார்களாம். ஆனால் அதை உடைக்காது தனியறையில் வைத்து பூட்டி யிருக்கிறார்களாம்—அமெரிக்க நீதிபதிகள்.

நபிகள் சிலைபோக, எஞ்சிய ஒன்பது சிலைகளின் முன்பாகத்தான் வழக்குகளை விசாரித்து நீதி வழங்குகிறார்களாம்.

இவ்வாறு நியூயார்க் டைம்ஸ் செய்தி கூறுகிறது.

பசுவதை

சிசுவதைச் செய்ய யாரே ஒப்பர்? சிசுவதைக் கொப்பாகும் பசுவதை! வதை என் மூலே பலரும் பதைப்பதைப்பர். அதற்கொரு பெரிய எடுத்துக் காட்டாக விளங்கிச் சென்றார் **அண்ணல் காந்தி!** 'ஹிம்சை'யை வெறுத்து 'அஹிம்சை'யை போதித்துப் போந்தாரன்றோ அவர்? காலஞ்சென்ற **கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை** அவர்கள் கூட 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு; பாலை முட்டிக் குடிக்குது கன்றுக் குட்டி' என்ற பாட்டின் வாயிலாக பசுவின் பாசத்தையும், மேன்மையையும் பாடிப் போந்தாரன்றோ? தம்மடியில் விழுந்த புருவிற்கு ஈடாகத் தம் தொடை சதையை அறுத்து, நிறுத்துக் கொடுத்து, புருவை ஆபத்தினின்று விடுவித்த **சிபிச்சக்ரவர்த்தியின்** ஜீவ காருண்யந்தான் என்னே! கடுங்குளிரில் துடித்த மயிலைக் காணச் சகியாது, தம்மேலிருந்தப் போர்வையை மயிலுக்குஈந்த **வள்ளல் பாரியின்** ஈகையே ஈகை; தவழத் தவித்த முல்லைக் கொடிக்கே இரதம் ஈந்த பெருந்தகையல்லவா பாரி? இவையெல்லாம் நோக்கும்போது பசுவதையை எவரேனும் ஏற்பரோ? பசுவைக் கொல்லத்தான் துணிவரோ?

பசுவதை—பசுக்கொலை பிரச்னை நம் நாட்டுப் பிரச்னையன்று! அது வடநாட்டுப் பிரச்னையேயாகும்!

பசுவதை—பசுக்கொலை என்பதின் பேரால் முஸ்லீம் மக்கள் இந்துக்கள் என்பார் மீது பாய்வதும், பசுவதை—பசுக்கொலை தடுப்பு என்பதின் பேரால் இந்துக்கள் முஸ்லீம் மக்கள் மீது மோதுவதும் வடநாட்டு வாடிக்கை! இந்து—முஸ்லீம் கலவரம் வடநாட்டாரின் 'பொழுது போக்கு!' என்றும் கூறிவிடலாம்.

பசுவை கொல்லக் கூடாது. ஏன்? அது சாதுவான பிராணி. பால்தரும் "காமதேனு"ப் பசு. வாயில்லா ஜீவனைக் கொல்வது பாபம்! அதைத் தெய்வமாகப் போற்ற வேண்டும். எனவே பசுவைக் கொல்லக் கூடாது. இது இந்துக்களென்போரின் வாதம்.

பசுவைக் கொல்லலாம்! எதற்கு? 'ஆண்டவனுக்கு பலி கொடுக்க! இறந்த பசுவின் தோலைவிட கொல்லப்பட்ட பசுவின் தோல் தரத்தில் உயர்ந்ததாயும், தன்மையில் சிறந்ததாயுமிருப்பதால்! கொல்லப்பட்ட பசுவின் கறி உணவிற்கு உருசியாயிருப்பதாலும் அதனுடைய எலும்புத்தூள் வயல்களுக்கு எருவாயும், சர்க்கரை செய்வதற்கு மூலப் பொருளாயும் விளங்குவதால் பசுவைக் கொல்வது அவசியம் என்பது கொல்லுபவர்களின் வாதம்!

இவர்களுக்கிடையில் பகுத்தறிவுவாதியாகிய உனது தீர்ப்பு என்ன?

பசுவானது தனது நான்காம் வயதில் கன்று ஈனும் பருவத்தை யடைந்து, தனக்கு பதினைந்துவயது முடிவதற்குள் ஆறு கன்றுகளுக்குக் குறையாமல் பெற்றுவிடுகிறது. அப்படியே உற்பத்தி பெருகி 150 ஆண்டுகளுக்குள் அப்பசுவின் சந்ததி ஒரு கோடிக்கு மேலாகவே பெருகிவிடுகின்றன. இக்கணக்கு மாடுகள் சரிவர போஷிக்கப் பட்டு, எவ்வித வியாதியினின்றும் ஆபத்தினின்றும் காப்பாற்றி அவைகளின் இயற்கைச் சாவிற்கே விடுவதாயிருந்தால் தான் பொருந்தும். இந்த நிலையில் மக்கட் பெருக்கத்தைக் காப்பாற்றவே உணவும், உடையும், இருக்கையும் காணாது பஞ்சத்தால் வதியவும், நோயால் சாகவுமான நிலையை நாம் அனுபவ ரீதியாகக் காணும்போது எங்ஙனம் மாடுகளின் பெருக்கை போஷித்து வளர்க்க முடியும்? மாடுகள் உணவின்றி போஷிப்பாரற்று, உயிருக்கு மன்றாடி நடுத்தெருவில் நின்றிடும் கோரக் கொடுமையை விட அவைகளைக் கொல்வதே ஒருவிதத்தில் சிறந்ததாகத் தோன்றுகிறது. ஹிம்சையை செய்யக்கூடாதென்றால் நாம் காய்கறிகளைக் கூட விலக்கவேண்டி வரும். அவைகளுக்கும் உயிர் உண்டு என்று ஜே. சி. போஸ் கண்டு பிடித்துக் காட்டிவிட்டாரே!

ஆகவே கொல்வது "பாபம்"தான். ஆனால் அதைவிட கொல்லாமல் கொல்வது அதைவிடப் பாபமல்லவா? அரசியல் சூதாட்டத்தின் நிமித்தம் பசுவதை பிரச்னையை பெரிதுபண்ணிக் காட்டத் தேவையில்லை!

டபிள்யூ. பி. டி. எழிலன்

திராவிடன்

சென்னை : 22—4—55 : வெள்ளி

அமைச்சர் சுப்ரமண்யம் அவர்களின் அறியாமை?

★

சென்னை மாநில ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ள அமைச்சர்கள், சட்டசபைக் கூட்டத்தில், உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போது, இந்திய அரசியல் சட்டத்தில் தங்களின் நிலை எந்த அளவுக்கு மட்டந்தட்டி வைக்கப் பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து பேசுகின்றனர். தங்களின் நிலை குறித்து உண்மையிலேயே மன வேதனைப் படுகின்றனர். நேரு சர்க்காரின் தாக்கீதுகளுக்குக் குனிந்து கொடுத்துக் கொண்டு இவ்விதம் அவதிப்பட வேண்டியிருக்கிறதே என ஏங்குகின்றனர். இதனால் தங்களின் நிலையை மறந்து நேரு சர்க்காரின் போக்கைச் சில சமயங்களில் மறைமுகமாகவும் கண்டித்துப் பேசுகின்றனர் அமைச்சர்கள்!

ஆனால் சட்டசபைக் கூட்டம் முடிந்ததும், நாட்டைச் சுற்றி பவனி வரும் வேலையில் ஈடுபடும்போது, அமைச்சர்கள் அரசியல் சம்பவங்களை அறவே மறந்து வம்பை விலைக்கு வாங்கும் "மேதாவி"த்தனத்தில் இறங்குகின்றனர். சட்ட சபைக் கூட்டத்தின்போது அமைச்சர்களுக்கு ஞானோதயம் உண்டாவதும், காங்கிரஸ் கூட்டங்களிலே பேசும்போது "போர்" அடிப்பதும் சென்னை மாநில அமைச்சர்களின் பிரத்யேக யோக்யதாம்சங்களில் ஒன்றாகக் காட்சியளிக்கிறது.

இந்த விபரீத வேலையில் நிதி அமைச்சர் சுப்ரமண்யனார் வீரநடை போடுகிறார்!

17-4-55-ம் நாள் கோவை காந்தி சதுக்கத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் பேசுகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும் முணுமுணுத்திருக்கிறார்! இவரின் சீற்றத்தையோ அல்லது முணுமுணுப்பைப் பற்றியோ நாம் கவலைப்படவில்லை. ஆனால் அவர் பேச்சிலே மலிந்துள்ள அறியாமையைக் கண்டு நாம் உண்மையிலேயே வருந்துகிறோம்.

அரசியல் துறையிலே மாற்றுக் கட்சிகளைப்பற்றி ஆளும் வர்க்கத்தினர் உண்மைக்கு மாறாக எதை வேண்டுமானாலும் பேசலாம் என்ற மட்டரகப் போக்கு வளருவது நாட்டுக்கு நன்மை பயக்காது அப்படிப் பேசித்திரியும் அமைச்சர்களையும் நாடு மதிக்காது என்ற உண்மையை அமைச்சர் சுப்ரமண்யனார் உணராமலேயேகீழ்க்கண்டவாறு அக்கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

> "பிராமணரல்லாத சமூகத்தினருக்கு திராவிடக் கழகமும்; திராவிட முன்னேற்றக் கழகமுமே கொடிய வைரிகள்...திராவிடக் கட்சிகளின் பிரச்சாரத்தினால் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையே பிராமணரல்லாத சமூகத்தில் அதிகம் பேர் படிப்பில்லாமல் இருப்பதற்குக் காரணம்......!"
>
> —சு. மி. 18—4—55

அமைச்சர் சுப்ரமண்யம் போன்றோரிடமிருந்து தி. மு. க.வோ அல்லது அதன் தாய்க் கழகமோ "சபாஷ்" பட்டத்தை எதிர்பார்த்திருக்கவில்லை. அப்படி எதிர்பார்ப்பதும் பைத்தியக்காரத்தனமாகும், திராவிட இயக்கப் பிரச்சாரத்தின் பலனாக பார்ப்பனரல்லாதார் கல்வித்துறையிலும், உத்தியோகங்கள் போன்ற பிரச்னைகளிலும் பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு முன்பாக எந்நிலையிலிருந்தனர் இன்று எந்த அளவுக்குத் தலை நிமிர்ந்து நிற்கின்றனர் என்பதை அமைச்சர் சுப்பரமண்யனாரின் அரசியல் குரு என கூறப்படும் ஆச்சாரியார் அவர்களின் அந்தராத்மாவுக்கும் ஆச்சாரியாரின் பரம்பரைக்கும் தெரியுமேயன்றி சுப்ரமண்யங்களுக்குப் புரியாது!

அப்படிப் புரிந்தாலுங்கூட மனச்சாட்சியை ஒதுக்கி வைத்துவிட்டு உண்மைக்கு மாறாகப் பேசினால்தான் பார்ப்பனர்களும் தங்களை "நல்ல பிள்ளைகள்" என்று எண்ணுவர் என்பது சுப்ரமண்யங்களின் அபூர்வ கண்டு பிடிப்பாகும்!

எனினும் அமைச்சர் சுப்ரமண்யம், உள்ளபடியே ஒருக்கால் அறியாமையினால் கோவையில் இவ்வாறு பேசியிருப்பின் அவர் தெளிவு பெற சில உண்மைகளை அவர் புத்திக்கு எட்டும்படியாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு முன் திராவிட மக்களில் படித்த பட்டதாரிகள் எத்தனை பேர்? சாதாரண கல்வியறிவில் தேர்ச்சி பெற்றவர்தான் எத்தனை சதவிகிதம்? நடுத்தர உத்தியோகங்களில் அன்று ஆரியர் எத்தனைபேர் திராவிடர் எத்தனைபேர்? டாக்டர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், என்ஜினீயர்கள் மற்றும் உயர்தர உத்தியோகஸ்தர்கள், ஏன் மந்திரிகள்கூட, அன்று திராவிட சமுதாயத்தினரின் குறிப்பாக பிற்படுத்தப்பட்ட— தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை எந்நிலையிலிருந்தது! இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் அன்று ஆரியர்களின் ஆதிக்கம் தலைவிரித்தாடி வந்ததானது இன்று தலை சாய்ந்திருக்கக் காரணம் யார் அல்லது எந்த இயக்கம்! இவைகளையெல்லாம் அமைச்சர் சுப்ரமண்யம் ஆர அமர நடுநிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்தால் அவரின் அறியாமைக்கு மற்றவர்கள் புத்தி கூற வேண்டிய அவசியமின்றி அவரே தெளிவு பெறுவார் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. எனவே இனியாகிலும் அமைச்சர் சுப்ரமண்யங்களுக்கு இந்நாட்டு அரசியல் பார்ப்பனர்களிடம் 'சபாஷ் பட்டம்' வாங்கவேண்டுமென்ற எண்ணமிருப்பின் வேறு எந்த வித்தைகளைக் காண்பித்தாவது "நல்ல பிள்ளைகள்" ஆகட்டும் அதற்காக திராவிட இயக்கங்களின் மீது வசை புராணம் பாடுவது அறிவுடைமையாகாது என்பது மட்டுமல்ல நன்றிகெட்ட செயலாகும் என்பதை அமைச்சர் சுப்ரமண்யனார் போன்றவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

●

காங்கிரசுக்கு புதிய சரக்குகள்

ஆளும் வர்க்கத்தினரை அண்டி நின்று பட்டம் பதவிகளில் இருந்து, சாதாரண சலுகைகள் வரை சுலபத்தில் பெற்றுவிடலாம் என்ற வித்தையில் சில அரசியல்வாதிகள் ஈடுபட்டுள்ளனர். இவ்வித எண்ணம் கொண்டவர்கள் தங்களின் தவறான போக்கை மறைப்பதற்காக தாங்கள் எந்த இயக்கத்திலிருந்து பணியாற்றினார்களோ அந்த இயக்கத்தைத் தூற்றியும் வசை புராணம் பாடிக்கொண்டும் வெளியேறுவதை ஒரு வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

அரசியல் துறையில் உள்ள நாலாந்தர ஐந்தாந்தர பேர்வழிகளிடம் இவ்விதப் போக்கு இருந்தால் அதைப்பற்றி நாம் கவலைப்படப் போவதில்லை. ஆனால் ஒரு இயக்கத்தின் முன்னணியில் இடம் பெறுமளவுக்குத் தங்களை வளர்த்துக் கொண்ட பின்னர் அதே கட்சியைப்பற்றி தவறான பிரச்சாரம் செய்யும் போதும் அதன் தலைவர்களை தூற்ற முனையும் போதும் நாம் உண்மையிலே வருத்தமடைகிறோம்.

உதாரணமாக அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் பொதுச்செயலாளர் தோழர் ராஜ்போஜ் அவர்கள், அதன் தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இயக்கத்தை நடத்தும் முறையில் அபிப்ராய பேதம் கொண்டு அறிக்கை வெளியிட்டிருந்ததை வாசகர்கள் அறிவார்கள். தோழர் ராஜ்போஜ் அவர்களின் அறிக்கைப்படி அம்பேத்கார் அவர்களின் போக்கிலே தவறிருக்கிறதா என்பதைப்பற்றி நாம் இப்போது ஆராய முன்வரவில்லை.

ஆயிரமாயிரம் மேடைகளில் அனைத்திந்திய காங்கிரசின் ஏகாதிபத்ய போக்கினால் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்க்கையில் வளம் பெற முடியவில்லை என முழங்கிய தோழர் ராஜ்போஜ் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் மீது பழியை சுமத்திவிட்டு அதே காங்கிரசிடம் சரணாகதி அடையப் போவதாக அறிவித்திருப்பது மிக மிக வருந்தத் தக்கதாகும்.

அம்பேத்கார் அவர்களின் போக்கிலே தவறிருக்குமானால், ராஜ்போஜ் அவர்கள் தனித்து நின்று தாழ்த்தப் பட்டோர் இயக்கத்தை நடத்துவதுதான் அரசியல் நேர்மையேயன்றி, அதையே ஒரு காரணமாக வைத்துக் கொண்டு அனைத்திந்திய காங்கிரசில் தஞ்சமடைவது தன்மானமுள்ள செயலாகாது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்த துரோகம் என்று கூறின் மிகையாகாது.

நிற்க காங்கிரஸ் மேலிடத்தவர்களும் இப்படி புதுப்புது சரக்குகள் தம்மிடம் வந்து குவிகிறதே என்று கித்தாப்புக் கொள்வார்களேயானால் வருங்காலத்தில் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டவர்களாகவேயாவர்.

எந்த இயக்கத்தவராயினும் நேர்மைக்கு மதிப்பு கொடுக்க வேண்டுமேயல்லாது சமய சஞ்சீவிகளை பயன் படுத்திக் கொண்டு தங்கள் ஆதிக்கத்தை நிலைபெறச் செய்யலாம் என்பது இடைக் காலத்தில் வெற்றியளிக்கலாம் ஆனால் இறுதியில் படுதோல்வியே என்பதை காங்கிரஸ் மேலிடத்தார் தங்கள் புத்தியில் கொள்ள வேண்டுகிறோம்.

●

பண்டுங் மாநாடு

ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு பண்டுங்கில் நடைபெற்று வருகிறது: இம்மாநாட்டில் சீனா போன்ற பெரிய நாடுகளில் இருந்து இலங்கை போன்ற சின்னஞ்சிறு நாடுகள்வரை கலந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் திராவிடத்தின் மக்கள் தொகையிலும் நிலப்பரப்பிலும் 8-ல் ஒரு பங்கு 10-ல் ஒரு பங்கு உடைய நாடுகள் எல்லாம் பிரதிநிதித்துவம் பெற்று இம்மாநாட்டில் தங்கள் கருத்தினைத் தெரிவிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றன. திராவிடத்தைவிட வளத்திலும் வசதியிலும் மக்கள் தொகையிலும் நிலப்பரப்பிலும் மிகமிகக் குறைந்திருக்கும் நாடுகள் எல்லாம் இம்மாநாட்டில் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பதை எண்ணிப் பார்க்கும் போது நம்முடைய திராவிடம் தனித்திருந்தால் இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருக்குமல்லவா!

மற்றைய குட்டி நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ளும்போது, திராவிடத்திற்கு அவ்வாய்ப்பில்லையே என்று வருந்துவது தவறாகாது. மேலும் இது தானே உண்மையான நாட்டுப் பற்றாகும்.

இக்கருத்தினைக் கூறும் தி. மு. க. வினரை —இதெல்லாம் குறுகிய மனப்பான்மை—என்று கூறத்தான் தேசியத் தோழர்களுக்கும் பரந்த கண்ணோட்டக்காரர்களுக்கும் நேரமிருக்கிறதேயன்றி, இன்று குட்டி நாடுகள் தலைநிமிர்ந்து பேசுவதையும் எண்ணிப் பார்ப்பதில்லை. ஆகவே இதைப் போன்ற மாநாடுகளிலும் மற்ற விஷயங்களிலும் தனித்து நின்று தனது கருத்தைக் கூறும் உரிமை என்று திராவிடத்திற்குக் கிடைக்கிறதோ அன்றுதான் திராவிட மக்களுக்கு அரசியல் துறையிலும் வாழ்க்கைத் துறையிலும் உண்மையான நல்வாழ்வு ஏற்படும்.

●

பேராசிரியர் பேசுகிருர்!

வி. சுந்தரராசு, சங்கரன் பயிற்சிப் பள்ளி, திருச்சி.

6

உரிமை உணர்ச்சி பெருகி வரும் காலம் இது. உரிமைக்காகப் பாடுபட்ட தலைவர்களுக்கு நினைவு விழாவும் மணி மண்டபமும் கட்டும் காலம் கூட நெருங்கி விட்டது. கடமை உள்ள அளவுக்கு மக்களுக்கு உரிமையும் உண்டு, உரிமை பறிமுதலானுல் உயிரையும் கொடுத்து மீட்க வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் பதிந்து விட்டது: புதிய வாழ்வு மலர்ந்ததின் பயனுக கடமையுணர்ச்சியோடு உரிமையுணர்ச்சியும் பெருக்கெடுக்க ஆரம்பித்து விட்டது.

கல்லூரி எங்கும் ஒரே பரபரப்பாக இருந்தது. பேராசிரியர்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு 10 நிமிடம் முன்னதாகவே வகுப்புக்குச் சென்று வகுப்பைத் துவக்கிவிட வேண்டும் என்று கல்லூரி முதல்வரும் சுற்றறிக்கை விடுத்துவிட்டார். கல்லூரி வட்டாரத்தில் முதல்வர் முதல் வேலைக்காரன் வரை அனைவரும் ஒரே ஆரவாரத்தில் மூழ்கி யிருந்தனர். ஆசிரிய மன்றத்தினின்று மெதுவாக வகுப்புக்கு நகர்ந்தேன். போகும்போதே எதிரே கண்ட கல்லூரி முதல்வர் 'விரைவில் செல்லுங்கள் ஒரே கூக்குரலாக இருக்கிறது.' என்று சொல்லி என்னையும் துரிதப்படுத்திஞர். முன் சென்ற வேகத்தைவிட முதல்வர் சொன்னதற்காக கொஞ்சம் விரைந்த நடையாக என் வேகத்தை மாற்றிக் கொண்டேன். வகுப்புக்குள் நுழையும் சமயத்தில் கல்லூரியின் கீழ் பகுதி வாயில் வழியாக ஒரே சத்தம் கேட்டது. யாரோ ஒருவர் மெல்லிய குரலில் ஏதோ ஒன்றை வாய்விட்டுச் சொல்லவும் ஏனையோர் அனைவரும் ஒன்று திரண்டு கூக்குரல் எழுப்பும் ஒலியும் கேட்டது, கொஞ்சம் எட்டிப் பார்த்தேன். கீழ்ப்புற வாயிலில் பெரிய கூட்டம் ஒன்று தென்பட்டது. 'என்ன கூட்டம்? ஏன் இப்படிப்பட்ட கூக்குரல்? என்று நினைத்தேன்.

நான் அந்த வாயிற்புறமாகப் பார்த்தது தான் மாத்திரம்; கல்லூரிச் சேவகன் ஓடோடிவந்தான். ஏதோ சொல்ல முணுமுணுத்தான். அதற்குள் முதல்வரே வந்து விட்டார் 'ஒன்றும் கவலைப்பட வேண்டாம், நண்பரே வகுப்புக்குப் போங்கள்' என்ருர். ஏதோ புதிய அதிர்ச்சி என்று மட்டும் உணர்ந்து கொண்டேன். வகுப்பினுள் சென்றேன். பெருத்த ஏமாற்றத்தைத்தான் அடைந்தேன். நூற்றுக்கணக்கான மாணவர்கள் இயங்கி வந்த வகுப்பறையில் நான்கே நான்கு மாணவர்கள் தான் அமர்ந்திருந்தனர். அந்த நால்வரும் வகுப்புப்பாடத்தில் ஆர்வமும் அக்கரையும் உடையவர்களுமல்ல. இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்ற பிற்போக்கு எண்ணம் படைத்தவர்கள். வகுப்புப் பாடம் வெறும் தேர்வில் வெற்றி பெற என்று எண்ணும் மனப்பான்மை உடையவர்கள்; கற்பது அனைத்தும் ஊதியம் பெறுவதற்கே என்ற குறுகிய எண்ணம் உடையவர்கள்; இப்படிப்பட்ட யந்திரம் போன்ற வாழ்க்கையை இயங்கிய மாணவர்கள் நால்வர் தான் வந்திருந்தனர். கற்பிக்கும் பாடத்தில் குறைபாடு இருப்பின் சிறிதும் தயங்காது விஞக்களை எழுப்பி வகுப்பறையை விவாத அரங்காக்கிய இளங்கோவனை வகுப்பில் காணேம்! புதிய கருத்துக்கள் சொல்லும் போது செவிமடுத்துக் கேட்ட ஞானசம்பந்தன் எங்கே? பேச்சாரவத்தில் மூழ்கிப் போய் 'மெய் மறந்து போனேன்' என்று சொன்ன ஆறுமுகத்தைக் காண இயலவில்லை இப்படியாக கல்வித்துறையில் ஆர்வம் மிகுந்த செல்வங்களெல்லாம் வகுப்புக்கு வரவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு நேரதாமதமாக வெங்கடராமன் என்ற மாணவன் வந்தான். ஏன் இவ்வளவு காலம் தாமதம் என்று கேட்டேன். வரும்போது மிகவும் நுணுக்கமாகப் பரிசோதித்து அனுப்பினுர்கள் என்ருன். பைக்குள் ஆயுதம் ஏதேனும் இருக்கிறதா என்று உள்ளே வரும் போதே கல்லூரியின் கீழ்ப்புறவாயிலில் சோதித்துச் சோதித்து அனுப்பினர்களாம். மேற்புற வாயிலை இருக்கப்பூட்டி விட்டார்களாம். யாருமே இப்புறத்தின் வழியாக அனுமதிக்கப்படவில்லை. அன்று மட்டும் பெற்ருேராயினும் உற்ற நண்பராயினும், கல்லூரிப் பேராசிரியர்களும் மாணவர்களுமன்றி யாருமே அனுமதிக்கப்படவில்லை.

நான்கு மாணவர்கள் கல்லூரித் தலைவர் கூடத்திற்கு அருகே உண்ணு விரதம் பூண்டு அமர்ந்திருந்தார்கள். மாணவர்கள் இரண்டு நாளைக்கு வகுப்பறையினுள் நுழைவதில்லை யென்றும் வகுப்புப் பாடங்களைப் புறக்கணிக்க வேண்டுமென்றும் உறுதி கொண்டுள்ளார்களாம். ஆர்வம் மிகுந்த மாணவர்கள் இந்த செயலில் பெரிதும் ஈடுபட்டிருந்தனர்.

உணர்ச்சி மிக்க மாணவர்கள் இல்லாத வகுப்பறையைத் தொடர்ந்து இயங்குவிக்கும் ஆர்வத்தையும் இழந்து விட்டேன். அன்றைக்குத்தான் என் தொழிலும் யந்திரத் தொழில்போல் மாறிவிட்டது. கடமையை முடித்துக் கொண்டு வகுப்பினின்று பிரிந்து வந்துவிட்டேன். அப்போதுதான் மாணவர்கள் கூக்குரல் காதுக்கு எட்டியது! 'உரிமைக்குப் போராடும்' மாணவ உரிமையை மீட்டே தீருவோம்; மாணவர் கழகம் மாணவருக்கே; கல்லூரியின் அடக்கு முறை ஒழிக! என்றெல்லாம் ஒலித்த ஒலியைக் கேட்டேன். கொஞ்சம் அமைதியாக ஆசிரிய மன்றத்திற்குச் சென்றேன். அங்கே பொருளாதாரப் பேராசிரியரும் முதல்வரும் அமர்ந்து ஏதோ ஆர்வமாகப் பேசிக்கொண்டிருந்தனர். 'இந்த நிலைவரும் என்று தெரிந்திருந்தால் அனுமதித்திருப்பேன்' என்ருர் முதல்வர்

இனி அனுமதித்துப் பயன் இல்லை; மாணவர்கள் இனிமேல் அனுமதித்தால் நம்மைக் கேவலமாக எண்ணி விடுவார்கள். இரண்டு நாள்தானே இவர்கள் கிளர்ச்சி செய்வார்கள். செய்துவிட்டுப் போகட்டுமே; மூன்ருவது நாள் வகுப்புக்கு அவர்கள் வரும்போது ஆறுதல் படுத்திவிடலாம்' என்று பொருளாதாரப் பேராசிரியர் சொன்ஞர்.

இனிமேல் தான் அனுமதித்தாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது; அந்த மாணவர்கள் சொல்லும் நாராயணசாமியே வரட்டும். வந்து இலக்கிய மன்ற சிறப்புக் கூட்டத்தில் பேசட்டுமே! அவர் பேசினுல் என்ன தலையா போய்விடும்; நானும் அவரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். நன்கு படித்தவர்தானும். புலமை உள்ளம் படைத்தவராம்; பி. ஏ. ஆனர்ஸ் வரைப் பயின்றவராம்; ஒருமுறை தமிழ்ப் பேராசிரியராகக்கூட ஆறுமாத காலம் பணியாற்றியுள்ளாராம். அவரை அழைக்க மாணவர்களுக்கு அனுமதி தந்துவிடலாம் என்றுதான் எண்ணுகிறேன். இன்றேல் குழப்பம் பெருகிவிடும். அடக்க இயலாமலும் போய்விடும். தொல்லை பெருகுவதைவிட இப்போதே அதனைத் தடுத்து விடலாம் என்று கருதுகிறேன். இவ்வளவு பெரிய காரியமாக இது முடிந்துபடும் என நான் எண்ணவில்லை. என்று யோசித்து யோசித்து முதல்வர் சொல்லிக் கொண்டிருந்தார்.

இப்பொழுதுதான் முழு உண்மையையும் உணர முடிந்தது. என் முதல் மகன் தாரைமணி இளைஞுக இருக்கும் போது மிகவும் குறும்புத்தனத்தில் ஈடுபட்டிருந்தான். சின்ன வயதிலேயே இந்த பிஞ்சு உள்ளத்தில் குறும்புத்தனமும் போக்கிரிப் பண்பும் வளர்ந்து படுகிறதே என்று எண்ணி மிகவும் கசிந்ததுமுண்டு.

ஒரு நாள் உரையாடற் கூடத்திற்கு அழைத்துச் சென்றிருந்தேன். அதற்கும் அடுத்த நாள் அந்த கூடத்துப் பொறுப்பாளியான நண்பர். சண்முகம் என்னை சந்தித்து இரகசியமாக என் மகன் தாரைமணியின் குறை நலன்களைக் கேட்டுக் கொண்டே வந்தார். முழுதும் கேட்டபோது, அந்த கூடத்தில் மேசைக்குள் வைத்துவிட்டுப் போன கைக்கடிகாரம் காணுமற் போய் விட்டது என்ருர். எனக்கு இந்த செய்தி ஒரே திகிலையும் பயத்தையும் கிளறி விட்டது. "என் மகன் இதனை செய்திருக்க மாட்டான்" என்று கூட மொழிந்தேன். இல்லை ஐயா! நீங்கள் வெகு ஆவலுடன் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்த போது தங்கள் மகன் மேசையை இழுத்துத் திறந்ததுண்டு; ஏதோ பார்த்துவிட்டு மூடிவிட்டார். அவ்வளவுதான். சந்தேகம் சிறிதும் இல்லை என்ருர் இப்போது தான் எனக்கு மிகவும் துயரம் அதிகரித்தது.

சுருக்கமாக பேச்சை முடித்துக் கொண்டு வீடு சென்றேன். தாரைமணி உறங்கிக் கொண்டிருந்தான் மெதுவாக மேஜையைத் திறந்து பார்த்தேன். ஒன்றும் அகப்படவில்லை. அவன் பள்ளிக்கு நூல்களை எடுத்துச் செல்ல பயன் படுத்தும் பையையும் பார்த்தேன். அங்கும் காணேம் பகல் வேளையில் உடுத்தி யிருந்த சட்டைப் பையிலும் பார்த்தேன். ஏதோ காகிதங்கள்தான் தென்பட்டன. கடிகாரம் ஒன்றும் இல்லை. இனி இவன்மீது சந்தேகித்துப் பயன் இல்லை. கடிகாரத்தை இவன் பற்றி வந்திருக்க மாட்டான் என்ற முடிவுக்கு வந்து விட்டேன். அவன் உறங்கப் பயன்படுத்தி யிருந்த அழுக்குத் தலையணையை அகற்றிவிட்டுப் புதிய தலையணையில் படுக்கச் செய்துவிட்டு உறங்கலாம் என்ற முடிவுக்கு வந்தேன். மெதுவாக தலையணையை எடுத்தேன். புதிய தலையணையை வைக்கச் சென்றபோது கைக்கடியாரம் ஒன்று மின்னிக் கொண்டிருந்தது. அந்தோ! ஐயம் தீர்ந்து நல்லவன் என்று எண்ணியிருந்த முடிவு ஒரு நொடிப் பொழுதில் மாறுதல் அடைந்து விட்டது. ஒன்றும் பேசாமல் கடிகாரத்தை மட்டும் எடுத்துக் கொண்டு உறங்க வந்து விட்டேன்.

அன்று இரவு முழுதும் தாரை மணியைப்பற்றியே எண்ணம் ஓடிக்கொண்டிருந்தது. இந்த விபரீதமான செயலைச் செய்த அவன்மீது நான் எந்த துயரமும் படவில்லை என்னையே நான் நொந்து கொண்டேன். சிறுவஞக இருக்கும்போதே ஒளித்து வைத்துப் பழக்கி விட்டேன். எங்கெந்தப் பண்டங்களை அவன் தெரிந்து கொள்ளக்கூடாது என்று மறைத்தேனே அந்த பண்டங்களை உணர்ந்து கொள்ள வேண்டிய பற்றை நான் வளர்த்து விட்டேன். அதன் காரணமாகச் சிறுவனுக இருந்தபோது என்னுடைய பேனு நோட்டுப் புத்தகம், சில்லரைக்காக இவற்றைத் திருடினன். திருடப் பழக்கப்படுத்தி விட்டேன். குழந்தை வளர்ப்புக் கலையை தெரிந்து கொள்ளாத காரணத்தால் எவ்வளவுதான் உயர்ந்த குடும்பத்தில் பிறந்த போதிலும் குழந்தைகள் தகாத செயலை செய்து வாழ்க்கையில் துன்பப்படுகிருர் என்ற பாடத்தையும் அன்று இரவு தான் கற்றுக் கொண்டேன். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் அடிகளும் தொடர்ந்து என் நினைவுக்கு வந்தது.

"பொருளாளி திருடனைவிளைவிக்கின்ருன்;
பொதுவுடமையோன் திருடனைக் களைவிக்
[கின்ருன்"

உயர்ந்த உண்மையைத்தான் கவிஞரும்

8-ம் பக்கம்

ஆரம்பக்கல்வி சீர்திருத்தம்

திராவிடப் பித்தன்

11

ஆசான்களிடம் கல்வி பயின்ற இளைஞர்கள் 'இளமாணுக்கர்' என்று அழைக்கப்பட்டனர். இவ்விள மாணுக்கர்கள் சொல்வன்மையில் சிறந்திருந்தனர். தம் ஊர் பொது மன்றங்களில் கேட்போர் மகிழும் வண்ணம் பேசும் சிறந்த பேச்சாளர்களாக விளங்கினர். இவ்விள மாணவர் இவ்வுயரிய முறையில் பேச்சுவன்மைப் பெற்றுள்ளனரே யென்று பொதுமக்கள் வியக்கும் அளவிற்குச் சிறந்திருந்தனர் பண்டைக்கால இளம்மாணுக்கர்கள்.

படுமரத்து மோசிக்கீரன் என்னும் புலவர் பாடியதாக 'குறுந்தொகை'யின் உள்ள பாடல் இவ்வுண்மையை வெளியிட்டு நிற்கின்றது.

"அன்ன யிவனோ ரிளமா ணுக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தி னூரும் பெருஞ் செம் மலனே"

[இது தலைவி கூற்று. தலைவனுக்குத் தூதாக வந்த பாணனை ஏற்றுக் கொண்ட தலைவி 'இவ்விள மாணுக்கன் நன்ருகப் பேசுகின்ருன்; இங்கே விருந்து பெறுவான்' என்று உணர்த்தியது] 'பாணன் வாயிலாகப்புக்குத் தலைவன் பெருமையைச் சொல்வன்மை புலப்படப் பாராட்டினுதலால் அவன் கல்வியைச் சிறப்பிக்க எண்ணி 'இளமாணுக்கன்' என்ருள்' என்பதும் 'அயலதாகிய இவ்விடத்திலே இங்ஙனம் சொல்வன்மையுறப் பேசுவோன் தன் ஊரில் தான் தங்கும் மன்றத்தில் இன்னும் சிறந்த சொல்வன்மையுடையவன் போலும் என்னும் கருத்தால் என்னென் கொல்லோ என்ருள்' என்பதும் உ. வே சாமிநாதய்யர் கூறும் விரிவுரைகளாகும்.

மேற்கூறியதினின்றும் இன்று போலவே அக்காலத்திலும் மாணவர்கள் இருந்துவந்தனர் என்பது தெரியவரும். மற்றும் மாணுக்கர் இரந்தும் கல்வி கற்று வந்தனர் என்பதும் தெரிய வருகிறது. பாணர் வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் தான் இரந்து உண்டு கல்வி பயின்று வந்தனர் என்பது மட்டுமல்ல. பொதுவாகவே ஏழ்மையில் சிக்கிய மாணுக்கர் எவரும் இரந்து கல்வி கற்று வந்தனர் எனக்கொள்வது தவருகாது.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைப் புகினும் கற்கை நன்றே"

எனும் முதுரையை நோக்கித் தெரிக.

தெற்றிப் பள்ளிகளில்— அதாவது திண்ணைப் பள்ளிகளில்...அடிப்படைக் கல்வியைக் கற்கும் இளம் மாணவர்கள் "மையாடலாடல் மழபுலவர்" எனக் கூறப்படுகின்றனர் பரிபாடலில்.

"மையாட லாடன் மழபுலவர்
[மாறெழுந்து
பொய்யாட லாடும் புணர்ப்பி னவரவர்
தீயெரிப் பாலுஞ் செறிதவமுன் பற்றி
[யோ
தாயருகா நின்று தவத்தைந்நீ ராடுக
னீயுரைத்தி வையை நதி"

(பரிபாடல், 11 வையை, உ. வே. சா. பதிப்பு)

இதன் பொருளாவது: மைபோலே பிடித்த இளைய புலவரது விளையாட்டிற்கு மாருயெழுந்து காமக்குறிப்பில்லாத விளையாட்டைச் செய்கின்ற ஆயத்தினையுடைய அம்மகளிர், நீர்க்கண... புலன்களடக்கிச் செய்யுந்தவத்தை முன் அடுத்தடுத்துச் செய்தோ தாயருக்காக நின்று தவமாகிய தைந்நீராடலை யின்கட் பெற்றது என்பதாகும். இதில் வரும் 'மையாடலாடல் மழபுலவா' என்பதற்கு கல்வி தொடங்கின அளவாதலின் மழபுலவர் என்ருர் என்று கூறியுள்ளார் நக்கீரர். கல்வி கற்கும் நிமித்தமாக கல்விச்சாலையில் அப்போது தான் சேர்க்கப்பட்டு மையோல் பிடிக்கும் இளைய பருவமுடையச் சிறுவர்கள் என்று கூறப்படுதலின் மேற்கூறிய உண்மை தெரியவரும்.

மேற்கூறிய குறுந்தொகைபாடலினின்றும் அக்காலத்தில் இளமாணவர்கள் பட்டிமண்டபம் ஏறி வியத்தகு முறையில் பேசினர் என்பது தெரிந்து இன்புறத்தக்கதாகும். அக்காலத்து சொல்வன்மை மிக்க மாணவர்களும் மற்றவர்களும் எப்பொருள் பற்றி எவ்விடத்துப் பேசுதல் வேண்டும், என்ற வழிவகைகளை அறிந்து பேசி வந்தனர். சொல்வன்மை அக்காலத்து 'கட்டுரை' என வழங்கிற்று 'கட்டுரை வகை' எனக் கலைப்பெயராக மணிமேகலையில் கூறப்படுகின்றது. கட்டுரைவகை என்பது தொகுத்துக் கூறும் சொல்வன்மையே யாகும். சொல்வன்மையை வளர்த்தற்கு 'உரை நூல்' பயன் பட்டதெனவும் காவிரிப்பூம் பட்டினத்தில் அமைந்த அறங்கூற வையத்தில் இவ்வுரை நூல் வழங்கப் பெற்றதெனவும் இவ்வுரை நூல் நெறிக்கு மாறுபட பேசுதல் தவறெனவும் இளங்கோவடிகள் கூறுவதும் காண்க. பேச்சுப் பயிற்சியில் வல்லமை அடைவதற்கான மாணவர் மன்றங்கள், பட்டி மண்டபங்கள் அக்காலத்திலிருந்து வந்த உண்மையும் இவற்ருல் தெரிவது காண்க.

அக்கால மாணுக்கர் தம் ஆசிரியரிடத்தே அன்பும் ஆதரவும் உடையவர்களாக இருந்தனர். ஆசிரியர்க்குத் தேவைப்பட்ட பொருள்களைக்கொடுத்து உதவி அவர்களது இடுக்கண்களைப் போக்கினர். ஆசிரியர்களிடம் மாணுக்கராவேர் கீழ்ப்படிந்தும் அவர் இட்ட கட்டளைப்படி நடந்தும் நல்லொழுக்கங்களைக் கற்று வந்தனர். கல்வி கற்கும் கடமையை வெறுத்தொதுக்காமல் மனமுவந்து ஏற்று கல்வி கற்று வந்தனர். இவ்வுண்மைகளை ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் கூறியுள்ளார்.

'உற்றுழி யுதவியு முறுபொழுள்
[கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே'
—[புறம் 183]

என புறநானூற்றுப் பாடலில் வருதல் காண்க. 'தன்னுசிரியர்க்கு ஒருறு பாடுற்ற விடத்து அது தீர்த்தற்கு வந்து உதவியும் மிக்கப் பொருளைக் கொடுத்தும் வழிபாட்டு நிலைமையை பெருது கற்றல் ஒருவருக்கு அழகிது' என்பது இதன் பொருள். இதனின்றும் அக்காலத்தில் ஆசிரியர்—மாணவரிடையே நிலவி வந்த உயர்ந்தமுறை தெரிய வரும்.

மாணவர் எனப்பட்டோர் ஆசிரியரிடம் பணிவன்புடன் நடந்து கல்வியை விரும்பிக் கற்றனர் என்னும் உண்மையை திருவள்ளுவர் வாக்கினின்றும் தெரியவருவதும் இங்கு எடுத்துக்கூற வேண்டியதாகும்.

"உடையார் முனில்வார்போ லேக்கற்
[றுங் கற்ருர்
கடையரே கல்லாதவர்"
(திருக்குறள்—கல்வி—395)

"செல்வர் முன் நல்கூர்ந்தார் நிற்குமாறு போலத் தாமும் ஆசிரியர்முன் ஏக்கற்று நின்றுங் கற்ருர் தலையாயினர்; அந்நிலைக்கு நாணக்கல்லாதவர் என்ஞான்று மிழிந்தாரேயாவர்" என்னும் பரிமேலழகர் உரையினின்றும் அக்காலத்தில்கல்வி நாட்டங் கொண்டோர் ஆசிரியரிடம் பணிவும் பற்றும் கொண்டு கல்விகற்று வந்தனர் என்பது தெரிய வருதல் காண்க.

அக்காலத்தில் மாணுக்கர்கட்கு உணவும் உடையும் கொடுத்து எழுத்தாணியும் புத்தகமும் வாங்கித் தந்தனர் வாழ்க்கை வசதியுடையோர் என்பதும் ஏழ்மை நிலையில் இருந்த மாணவர்கள் இவ்வுதவிகளைப் பெற்று கல்வி பயின்று வந்தனர் என்பதும் தெரிய வருகிறது. மாணவர்கட்கு உதவி செய்வதைப் பெரும் மதிப்பிற்கும் சிறப்பிற்கும் உரிய தொண்டாக மக்கள் மதித்திருந்தனர் என்பதும் தெரிந்து கொள்ள முடிகின்றது. பதினெண்கீழ் கணக்குகளில் ஒன்ருன ஏலாதியில்

'ஊணொடுகூறையெழுத்தாணி புத்தகம்
பேணொடு மெண்ணு மெழுத்திவை
[—மாணொடு
கேட்டெழுதி யோதிவாழ் வார்க்கீ யந்
[தாரிம்மையான்
வேட்டெழுத வாழ்வார் விரிந்து'

கணிமேதையார் கூறுவதினின்றும் மேற்கூறிய உண்மை தெரியலாம்.

சிறுபஞ்சமூலத்தில் மாக்காரியாசன் கூறியுள்ள தினின்றும் அக்கால மாணுக்கரைப்பற்றியும் அவர்கள் பாடங் கற்ற முறையைப் பற்றியும் தெரிய ஏதுவுள்ளது.

நெய்தல் மொட்டின் அளவினதாம் மாணுக்கர் குடுமித்தலையின்கண் நீண்ட மயிரும் மண்ணுகொழிவது ஒரு திங்கள் நாளாகும். இனி அவர்கள் செய்கை, ஆசானை வலங்கொண்டுவந்து வணங்குதலும் நூல்களைப் பாடமோதுதலும், ஓதியவற்றின் பொருள் கேட்டலுமாகும் முதனை;

"நெய்தல் முகிழ்த்தனை யாங்குடுமி
[நேர்மயிரும்
உய்தல் ஒருதிங்கள் நாளாகும்—
[செய்தல்
நுணங்கு நூல் ஓதுதல் கேட்டல்
[மாணுக்கன்
வணங்கல் வலங்கொண்டு வந்து
—[சிறுபஞ்ச மூலம்-30]

எனவரும் பாட்டால் அறியலாம்.

பண்டைக் காலத்தில் மாணுக்கரின் இலக்கணம் என்ன என்பதையும் மாணுக்கன் எவ்வாறு தனது கல்விப் பயிற்சியைப் பெற்று வந்தான் என்பதையும் நன்னூல் பொதுப்பாயிர சூக்திரங்கள் விரிவாகத் தெரிவிக்கின்றன.

'தன்மக னுசான் மகனேமன் மகன்
பொருணனி கொடுப்போன் வழிபடு
[வோனே
உரைகோ ளாளற் குரைப்பது நூலே'
[பொதுப்பா 37

(மன்மகன்—அரசன் புதல்வன்; பொருணனி கொடுப்போன்—பொருளை மிகுதியாகக் கொடுப்போன்; உரைகோளற்கு —தன்னுற் சொல்லப்பட்ட வுரையை விரைவிலே கற்கும் அறிவுடையோனுக்கும்) எனவும்

'அன்ன மாவே மண்ணொடு கிளியே
[பொதுப்பா—38]

இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணுக்கர்'

இல்லிக்குடம்—ஒழுகும் குடம்; நெய்யறி—பன்னுடை) எனவும் நன்னூலாசிரியர் கூறுவதினின்றும் மாணுக்கர் எனத் தக்கவர் யாவர், அவருள் தலை மாணுக்கர், இடைமாணுக்கர், கடை மாணுக்கர் என திறமைக் கேற்ப எப்படிக் கொள்வது என்று மாணுக்கரது வரலாற்றைக் கூறியுள்ளதினின்றும் பண்டைக் கால மாணுக்கர் வரலாறு தெரியலாம்,

இனி மாணுக்கராகாதவரின் இலக்கணம் கூறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

'களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னுற் கஞ்
சுடுமாறுளத்தன் தறுகணன்பாவி [சித்
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே'
[பொதுப்பா 39]

(களி—கட்குடியன்; மடி—சோம்பேறி; படிறன்—பொய் பேசுவோன்) மேற்கூறியதில் ஏழையும் சேர்க்கப்பட்டுள்ளது நோக்கத்தக்கதாகும். ஏழ்மை காரணமாக கல்வி உரிமை அக்காலத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்த தென்பது தெரியலாம். மாணுக்கரதுவரலாறு கூறுமிடத்தும் பவணந்தியார் மிகுதியாகப் பொருள் கொடுப்பவனையே மாணுக்கனுக தகுதியுடையவன் எனக் கூறியிருத்தலும் இதை உறுதிப்படுத்தும்.

இனி மாணுக்கராவர் கல்வி பயிலும் முறையாது என்பதனை விளக்கிக்கூறும் நன்னூலாசிரியரின் பாக்கள் அறியத்தக்கனவாகும்.

'கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன்
[முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்
[சார்ந்
திருவென விருந்து சொல்லெனச்
[சொல்லி
பருகுவ னன்னவார் வத்த னுகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னுகக்
கேட்டவை கேட்டவை விடா துளத்
[தமைத்துப்
போவெனப் போ லென்மனூர் புலவர்'
(பொதுப்பா—40)

(கோடன் மரபு—பாடங் கேட்டலின் வரலாறு; முனியான்—வெறுப்பில்லாத வனுகி; பருகுவனன்ன—பசித் துண்பவனைப்போல)

'நூல்பயிலியல்பே நுவலின்வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண்புடையோர் தம்மொடுபயிறல்
வினுதல் வினுயவை விடுத்தலென்றிவை
கடனுக் கொளினே மடநனி யிகக்கும்'
(பொதுப்பா 41)

(மடம்—அறியாமையானது; நனி—மிகவும்; இகக்கும்—தன்னைவிட்டு நீங்கும்)

'ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பிற்
பெருக நூலிற் பிழைபா டிலனே'
(பொதுப்பா—42)

'முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்
(பொதுப்பா—43) [கும்'

'ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னுகும்'
(பொதுப்பா—44)

'அவ்வினை யாளரொடு பயில்வகை
[யொருகாற்
செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்'
(பொதுப்பா—45)

(அவ்வினையாளரொடு—தன்னைப் போல் இயல்புடையவரோடு; மையறு—குற்றமற்ற)

'அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே'
(பொதுப்பா—46)

(அழலின்—குளிர்காய்வோன்விட்டு நீங்காமலும் நெருங்காமலும் இருக்கின்ற நெருப்பைப் போல ஆசிரியனை நினைத்து அஞ்சி—அச்சமுற்று; நீங்கான்—விட்டு நீங்காணுகியும்; அணுகான்—நெருங்காணுகியுமிருந்து)

இப்படியாக மாணுக்கர் நூலைகற்கும் வரலாறும், இவ்வாறு நூலை பயின்றவர்க்கு அறியாமை மிகுதியும் போம் என்ற உண்மையும், ஒருகாற் கேட்ட துணையானே அமையாது இருகாற்கேட்ட துணையானே அமையாது இருகாற் கேட்பானுயின் அந்நூலின்கட் பிழைபாடு மிகுதியுமிலன் என்பதையும், முக்காற் கேட்டானுயின் ஆசிரியரின் கற்பித்த முறையறிந்துரைப்பன் என்பதையும், ஆசிரியன் கற்பித்தனவற்றைத் தன்னறிவின் கண் அமையக் கற்ருனுயினும் புலமைத் திறத்திற் காற்கூறல்லது பற்ருன் என்பதையும், தன்போலியரோடு பயிலும் வகையாற் காற்கூறும் அக்கல்வியைத் தன் மாணுக்கர்க்கும் அவைக் களத்தோர்க்கும் உணரவிரித்துரைத்தலான் அரைக் கூறுமாகக்குற்றமற்ற புலமை நிரம்பும் எனவும், மாணுக்கர் இன்னவாறு ஒழுகுதல் வழிபாடாகும் எனவும் பவணந்தி கூறுவதினின்றும் பண்டைக் காலத்து மாணுக்கர் கல்வி பயின்று வந்த வரலாறு இனிது விளங்கும் —தொடரும்

ஏகாதிபத்ய ஏஜெண்டுகளும் ஐந்தாண்டுத் திட்டமும்!

★

எந்த நாட்டிலுமே தங்கள் தாயக மக்கள் நல்வாழ்விற்காகவே முற்போக்கு கட்சிகள் தோன்றி பாடுபட்டு வரும், முதலில் தாயகம் பிறகே அகிலம் என்ற ரீதியில் செயல்படும். ஆனல் நம் நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியினா இதற்கு நேர்முரணகவும் இருக்கிருர்கள். இன்னும் சொல்லப் போனல் மாஸ்கோவுக்கு மதியை அடகுவைத்துவிட்டு அங்கு வைக்கும் ரிகார்டு இங்கு ஒலி பரப்பப் பாடுவதுபோல் மைக்குகளாக காட்சி தருகிருர்கள். ரஷ்யா எந்த நாட்டை எதிர்க்கிறதோ அந்த நாட்டை இவர்களும் எதிர்ப் பிரச்சாரம் செய்ய வேண்டும். ரஷ்யா டில்லியைப் பாராட்டினல் இவர்களும் நேரு கையைப் பலப்படுத்த ஓடுகின்றனர். ரஷ்யா இந்தியாவைக் கண்டித்தால் இவர்களும் கண்டிப்பார்கள்?

பொதுவுடமை நாடல்லாத இந்தியாவை 'கம்யூனிஸ்டுகளுக்கு மூளைகாலி—சயபுக்தி கிடையாது, எங்கிருந்தோ இயககுவிக்கப் படுகிருர்கள். மார்க்ஸிசம் இந்தக் காலத்துக்குப் பொருந்தி வராது' என்று சீன சென்று திரும்பினலும் எந்நேரமும் கம்யூனிஸ்டுகளைத் தாக்கும் நேரு சர்க்காரை ரஷ்யா ஆதரித்து முகஸ்துதி பாடுவதைப்பற்றி ஏன் என்று நாம் கேட்கவில்லை. ரஷ்யாவுக்கு இது வெளிநாட்டுப் பிரச்சினை. 'அவளுக்கு இவள் லட்சணம், இவளுக்கு அவ லட்சணம்' என்பது போல் அமெரிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு இந்தியா தேவலை என்ற ரீதியில் ரஷ்யா கருதுகிறது. ஆனல் அதே சமயத்தில் நமக்கு அது உள்நாட்டுப் பிரச்சினையிலும் வடநாட்டு நேரு சர்க்காருக்கு அடிபணிய வைத்துவிடக் கூடாதே!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை மட்டும் கண்டித்துவிட்டு டில்லி ஏகாதிபத்தியத்திற்கு தாளம் போடலாமா! ரஷ்யா பாராட்டுகிறதென்ருல் ரஷ்யாவை இந்தியாவோடு இணைத்து விடுவோமென்று கூறுகிறது? ரஷ்யாவின் உள்நாட்டுப் பிரச்னையில் டில்லி சர்க்கார் தலையிட ரஷ்யாவிடவில்லை அதன் எல்லைக்கோட்டில் நின்று கொண்டு பேசுகிறது. மற்ற பொதுவுடமை நாடுகளோடு கூட இணைந்து விடவில்லை. உலக மக்கள் வரவர கூட்டுறவையே நாடுகிருர்கள் என்று பரந்த கண்ணேட்டத்தார் பீத்துகிருர்களே! எந்தவித கூட்டுறவு! சீட்டோ, நேட்டோ, காமன்வெல்த் என்றும் பொதுவுடமை நாடுகள் எல்லாம் கோமின்பாரம் என்ற அமைப்பிலுந்தான் இணைகின்றன. எவ்வளவு சிறிய நாடாயினும் பெரிய நாடாயினும் இரண்டே அணியில் ஏதாவது ஒன்றில்தான் ரஷ்யாவை அமெரிக்காவோ அல்லது அமெரிக்காவை ரஷ்யாவோ வென்றுவிடும் என்று முழு நம்பிக்கை இல்லாதபோது இந்தியாதான அதைவிட பெரிய வல்லரசாகப் போகிறது? இந்த அணுயுகத்திலுமா [Atom Age] சிறிய நாடு பெரிய நாடு பிரச்சினை எவ்வளவு சிறு நாடாயினும் நாலே குண்டுகளில் உலகை அழிக்க முடியும் என்ற நிலை வந்து விட்டதே! பயமின்றி வாழ பரந்த நிலப்பரப்போ, அதிக மக்கள் தொகையோ வரப்போகும் காலத்தில் உலகில் வெல்வதாயில்லை. விஞ்ஞான அறிவுதான் அதன் பயன்தான் நமக்கு ஆயுதம். எனவே திராவிடம் சிறு நாடாயிற்றே என்ற கவலை இனி இல்லை. பிரிட்டனே அணுகுண்டு தயாரிக்கும்போது நம் திருவாங்கூர் கொச்சி பகுதியில் தோரியத்தைக் கொண்டு அணுகுண்டைப் பயன்படுத்தலாமே நல்வழியில்! மக்கள் நல்வாழ்வுக்காக.

இதுதான் கம்யூனிஸ்ட்கட்சியைப்பற்றிய பொது விமர்சனம் பீடிகையை நிறுத்திவிட்டு இங்கு குறிப்பிட்ட விஷயத்திற்கு வருவோம். 'நாமோ டில்லிக்கு அனுப்பி விடுகிருேம் வரியாக அதை அபகரித்து வடக்கு வளம் கொழிக்கிறது. தெற்கு புறக்கணிக்கப்படுகிறது. ஆலைகள் இங்கு வேண்டும்; நாங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் பிச்சை எடுக்கிருேம். வரியை அனுப்பிவிட்டு, எங்களையும் வாழவிடு' என்று சென்ற மார்ச் 20-ல் முழக்கமெழுப்பினேமல்லவா! அது இப் பரந்த கண்ணேட்ட கட்சிக்கு கசப்பைத் தந்திருக்கிறது அதாவது டில்லி ஏகாதிபத்தியத்தைக் கண்டிக்க மாஸ்கோவிலிருந்து ஆர்டர்வரவில்லையாம், அஜாய் கோஷ் சர்க்குலர் அனுப்பவில்லையாம், டல்லஸ், நிக்ஸனை எதிர்க்க மட்டும் சொன்னர்களாம். எனவே டில்லியின் ஓரவஞ்சனைப் போக்கை கண்டித்த நம்மீது பாய்ந்து பார்க்கிறது ஜனசக்தி என்னும் அவர்கள் ஏடு.

இதிலிருந்து இவர்களது தாயக மக்கள் பக்தியை புரிந்து கொண்டோம் இது நல்லதுதான் இப்படி எழுதாது இருந்தால் இவர்களைப்பற்றி தாயக மக்களுக்காக பாடுபடுபவர்கள் என்று தானே நாம் எண்ண வேண்டிவரும். காங்கிரசின் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொருத்த வரையில் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், தி. மு. க வுக்கும் கொள்கை வேறுபாடு உண்டாம், ஏடு இப்படி தமது ஏகாதிபத்திய பக்தியை காட்ட ஆரம்பிக்கிறது. யார் வேறுபாடு இல்லை என்று சொன்னது! அதுதான் இந்த ஜனசக்தி விமர்சனத்திலிருந்து வெட்டவெளிச்சமாகி விட்டதே! தி. மு. க. வடநாட்டு டில்லியின் ஓரவஞ்சனைப் போக்கை எதிர்க்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி டில்லி ஏகாதிபத்தியத்துக்கு வெண்சாமரம் வீசுகிறது. வீசமறுப் போரை எதிர்க்கிறது, அதாவது டில்லி ஏகாதிபத்தியத்துக்கு நாமும் வாழ்க்கைப்பட வேண்டுமாம்! என்ன விசித்திரம்!

1. அந்த 3-4-55 ஜனசக்தி இதழில் தோழர் முத்தையா கம்யூனிஸ்டுகளின் அதிகாரக் குரலாக இப்படி எழுதுகிருர் எங்களூரில் ஒரு திட்டத்தை நிறைவேற்ருதிருக்கும் பொழுது எப்படி வடநாட்டில் பக்ராநங்கல், சித்தரஞ்சன் திட்டங்களை நிறைவேற்றலாம். வாய்ப்பு வசதி இல்லாவிட்டாலும் சரி, எங்களூரில் ஒரு திட்டத்தை நிறைவேற்ருத போது, வாய்ப்பு வசதி இருந்தாலும் வடநாட்டில் அந்த திட்டத்தை நிறைவேற்றுவது ஏன்! இப்படிப்பட்ட பிரதேச வெறி, இனவெறி தி. மு. க. தலைமைக்கே பிரத்தியேகமான ஒரு சம்பத்து என்று தன் வைவரிசையைக் காட்டுகிருர் அந்த முத்தையா!

ஏனய்யா முத்தையாக்களே! இந்த மாதிரி எந்த ஊரில் எந்த இடத்தில் யார் பேசினர்கள்! அல்லது எந்தப் பத்திரிகையிலாவது இப்படி எழுதினர்களா தி. மு. கழகத்தினர்! காட்ட முடியுமா! என்னமோ பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகமே இருண்டு விட்டது, தான் பால் குடிப்பதை யாரும் அறியார் என்று கருதிக் கொள்ளுமாம். அதுபோலல்லவா இருக்கிறது பரந்த கண்ணேட்டத்தில்பச்சைப் புளுகு. ஒரு கட்சியின் கொள்கையை இப்படிதாமின கற்பித்துக் கொண்டா அதற்கு மறுப்புரை தருவது?

நாங்கள் இவ்வளவு காலமாக வடநாட்டிலிருந்து பிரிய வேண்டுமென்று கூறி வந்தும் ஒரு சாதாரண வடநாட்டு பிரஜையின் மீது கூட பலாத்கார எண்ணத்தை உண்டாக்கவில்லையே! துவேஷம் காட்டவில்லையே! வெறுக்கவில்லையே, கண்டிக்கவில்லையே! வடநாட்டில் வாழும் சாதாரண மக்களல்ல நம்முடைய எதிரிகள். அவர்களையும் நம்மையும் ஆட்டிப் படைக்கும் வடநாட்டு ஏகாதிபத்தியத் தலைவர்கள் — பணக்காரர்கள் இதைப் பொதுச்செயலாளர் விளக்கமாக எழுதியும் அந்த ஏகாதிபத்திய பணத்திமிங்கிலங்களிருக்கும்போது நம்மை எதிர்க்க இந்தப் புரட்சியவாதிகள் அவர்களின் தாசர்களாவதேன்?

டல்லஸ் வந்தபோது ஜன்னலை உடைத்தவர்கள் நீங்கள் தானே! அது சோறு போட்டு பாட்டாளி வர்க்கம் மகிழ்ந்து கிடக்கிறதாமே! இந்தக் கம்யூனிஸ்ட் கட்சி டல்லசை எதிர்த்திரா விட்டால் இந்நேரம் நேரு அமெரிக்காவை ஆதரித்து, அதனல் அமெரிக்கா இந்தியாவை அமுக்கி அழித்திருக்குமாமே! ஆகா என்ன வெற்றி! வடநாட்டு வெறி என்றெல்லாம் குற்றஞ்சாட்டிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு இது எந்த வெறி ரகத்தைச் சேர்ந்தது! அமெரிக்காவிலும் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளதே! பிரிட்டன் கம்யூனிஸ்ட்கட்சி ஹாரிபாலிட் கூட சமீபத்தில் இங்கு வந்தாரே! பின் ஏன் அமெரிக்காவையும் பிரிட்டனையும் எதிர்க்க வேண்டும்! ஏன் அவர்களையும் விரட்ட வேண்டும்! அப்போது ஏற்படாத துவேஷ உணர்ச்சி வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டில் டால்மியா சிமெண்ட் பாக்டரி வைத்து சுரண்டுவதைச் சுட்டிக் காட்டும்போது துவேஷம் எங்கிருந்து வந்து குதிக்கிறது! ஹார்வி மில் கண்ணுக்குத் தெரியும்போது டால்மியாபுரம் மட்டும் படவில்லையா! ஏன் டால்மியா, டாட்டா, பிர்லாக்களுடன் பேரம் பேசியுள்ளதா கம்யூனிஸ்ட் கட்சி! பின் ஏன் எரிச்சல் படவேண்டும்! கனவில்கூட அமெரிக்கா அமெரிக்கா என்று கதறுவது கம்யூனிஸ்ட் கட்சிக்கு ரஷ்யா கொடுத்த சம்பத்தா! அந்த சம்பத்துக்கு இந்த சம்பத்து என்ன முரண்! கிடைத்த சந்தர்ப்பத்திலெல்லாம் நாம் துவேஷிக்கிருேமாம்! இவர்கள் மட்டும் அமெரிக்கா பிரிட்டனேடு கொஞ்சி விளையாடுகிருர்களாம் கென்யாவில், மலேயாவில், ஹாங்காங்கில் வெள்ளையர் சுரண்டுவதை இங்கிருந்துகொண்டு கண்டிக்கும்போது நமது தாயகத்தை வடநாட்டான் மார்க்கெட் ஆக்குகிருர்கள் என்று சுட்டிக் காட்டுவதிலே என்ன தவறு! ஐயோ திராவிடமே எங்கோ பிறக்க வேண்டியவர்கள் இங்கு தோன்றி விட்டார்களே!

2. 'இந்திய நாட்டில் ஏற்பட்டதொழில் வளர்ச்சி 1947 நமது தேசிய ஆட்சி ஏற்பட்ட பிறகு உண்டானவைகளல்ல. அவை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சிருஷ்டி' என்கிறது ஜனசக்தி,

என்ன அதற்குள் இப்படி ஒரு புது ஞானேதயம் உண்டாயிற்று 13-3-55 ஜனசக்தி இதழில், வடநாட்டு ஏகாதிபத்தியச் செயல் என்று நாங்கள் குறிப்பிடுவதை துவேஷம், எந்த சர்க்காரானலும் ஒரு திட்டத்தை நிறைவேற்ற முன் வந்தால் அதைக் கண்டிப்பது அறிவுடமையாகாது அது துவேஷம் என்று குறிப்பிட்டீர்கள், இந்த 3—4—55 இதழிலே, இது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சிருஷ்டி என்கிறீர்கள் இதிலே நம்மைப் பொறுத்த வரையில் விஷயம் ஒன்றுதான்! ஆள்தானே வேறு! நாம் நமது செல்வத்தை X என்பவன் கொள்ளையடித்து விட்டான் என்கிருேம், இன்று நீவிரோ அல்ல அல்ல பெரும் பகுதி Y என்பவன்தான் கொள்ளையடித்தான் என்கிறீர். X சரண்டினுலென்ன Y சரண்டினுலென்ன நம்மைப் பொறுத்த வரையில், செல்வம் பறிபோய்விட்டதுதானே. X என்பவன் சுரண்டி 1500 மைலுக்கப்பால் கொண்டுபோய் விட்டான், Y என்பவன் சுரண்டி 6000 மைலுக்கப்பால் சென்றுவிட்டான். ஆக இருவர் சுரண்டியதும் திராவிடத்திற்கு அப்பால் கொண்டு செல்லப்பட்டதுதானே ஹார்விமில் ஊதியம் லண்டனுக்கு போகிறது. டால்மியா பாக்டரி வருமானம் வடநாடு செல்கிறது,

3 தாமோதர் திட்டம் சித்தரஞ்சன் போன்ற பல திட்டங்கள் பிரிட்டிஷார் காலத்திலேயே திட்டமிடப் பட்டவை, அவர்கள் ஏகாதிபத்திய நோக்கங்களுக்கு தகுந்தாற்போல் உண்டானவை—என்கிறது மேலும் ஜனசக்தி.

இருக்கட்டுமே! அங்கு பிரிட்டிஷார் திட்டமிட்டதை பெல்லாம் முழு அளவில் இன்று நிறைவேற்றி வருகிருர்கள், இங்கு தென்னட்டிலும் எத்தனையோ மின்சாரத் திட்டங்கள் பிரிட்டிஷார் காலத்திலிருந்தே வகுக்கப்பட்டுள்ளனவே. அவற்றை இந்த டில்லி கவனிக்கவில்லையே. நெய்வேலி, சேலம் திட்டங்களும் வெள்ளையர் ஆட்சி காலத்திலிருந்தே சுமார் 50 வருடமாக பிரச்னையிருந்தும் சுதந்திரம் பெற்று 7 ஆண்டு கழிந்தும் கவனிக்கப்படவில்லையே. திராவிடம் இந்நேரம் தனியாட்சி செலுத்தி வந்தால் முதலில் நெய்வேலியைக் கவனிக்குமா! அல்லது இது பிரதானமல்ல என்று இன்று விட்டதுபோல் புறக்கணித்து வடநாட்டுக்கு அங்கு ஏற்படுத்த பணத்தை அனுப்பி யிருக்குமா! ரஷ்யா கூட தன் நாட்டை 30 ஆண்டு காலமாக வளப்படுத்திக் கொண்ட பின் பல்லவா பிற நேசநாடுகளைப் பற்றி நினைத்தது. இன்று பொதுவுடமை நாடான செக்கோஸ்லோவோக்கியாவிலும் நெய்வேலியை போல்பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்துகிறன : செக் நாடு டில்லிக்கு பணம் அனுப்பிவிட்டு சும்மா யிருக்கவில்லையே!

4. அடுத்து அந்த இதழில் தென்னடு புறக்கணிக்கப்படவில்லை என்பதற்கு **புள்ளி விபரம்** காட்டுகிருர் இந்த 'நிபுணர்'! அதாவது "இந்தியாவின் மொத்த ஜனத்தொகை 36 கோடி. தென்னடு ஜனத்தொகை 9 கோடி. நான்கில் ஒரு பங்கு. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவிட இருப்பது 2059 கோடி. இதில் ரயில் தபால் தந்தி போக்குவரத்து வசதிகளுக்கு 1241 கோடி. பாக்கி 828 கோடியில் தென்னட்டுக்கு 246 கோடி செலவழிக்க திட்டமிட்டுள்ளனர். இவைபோக ஆந்திராவில் 110 கோடியில் நந்திகொண்டா திட்டம், 60 கோடியில் நெய்வேலி, 7 கோடியில் பெரம்பூர் கோச் பில்டிங் பாக்டரி" என்று கணக்கீடு தருகிருர்.

புள்ளி விபரம் தருபவர் அடிப்படையிலேயே ஓட்டைவிடுகிருர். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முதலில் 1500 கோடி வரைதான் திட்டமிட்டனர். பின் அதை 2059 கோடியாக்கினர்கள். இன்று சுமார் 2600 கோடிக்கு உயர்த்திவிட்டனர். ஆகஇதில் மொத்த தொகையில் 600 கோடியை கே. எம். விழுங்கிவிட்டார். ரெயில் தபால் தந்தி வசதிகளுக்கு 1241 கோடியை தள்ளிவிட்டு சவுபார்க்கிருர். தென்னட்டிலே சுமார் 100 கோடி கூட நிறைவேற்றவில்லை என்பது கண்கூடு. அதிலும் தமிழகத்திற்கு 27 கோடிதான் ரெயில்வே தந்தி தபால் இலாகாவிற்கு. 1241 கோடியைப்பிரித்தாரே கே முத்தையா அதில் தென்னட்டுக்குஎவ்வளவு என்று ஏன் ஜனசக்தியில் குறிப்பிடவில்லை. அதில் என்ன திட்டத்தை நிறைவேற்றினர்கள்! காட்டட்டும் ஜனசக்தி! விடிய விடிய யோசித்தாலும் போடி ரெயில் லயினைச் சொல்லுவார். அது எத்தனை மைல்! 80 மைல்தான், ஆனல் வடநாட்டில் 3000 மைல்வரை ரெயில்பாதை போட்டுள்ளனர். சமீபத்தில் கூட 'ஹிந்து' இதழில் ஒரு படம் வந்தது,

13-ம் பக்கம் பார்க்க

பம்பாய்

பம்பாய்—மாதுங்கா

1-4-55-ம் நாள் மாலை 5—மணிக்கு மாதுங்கா இலாகியா கட்டிடத்தில தோழர்கள் தொ. து. அன்புச்செழியன் ஜ. ஜோசப் ஆகியோர் முறையே மூன்—வழி மொழிய தோழர் இ. என். எஸ். பிச்சையா தலைமையில் தோழர் யோ. தர்மராசன் திராவிடப் பண்ணுடன் பழைய நிர்வாகிகளுக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது

செயலாளர் தோழர் தொ. து. அன்புச்செழியன் கடந்த கூட்ட நிகழ்ச்சிகளை வாசித்துக் காட்ட, ஒப்புக்கொள்ளப்பட்டது. அடுத்து தோழர்கள் ஜோதிநாயகம், நாராயணன், எஸ்-எஸ். பாண்டியன், பெ. வரதராசன், அருணாசலம், தர்மராசன், அன்புச்செழியன், ஆகியோர் பழைய நிர்வாகிகளைப் பாராட்டிப் பேசினர். தேநீர் விருந்தும் நடைபெற்றது.

பம்பாய் தி. மு. கழக சொற்பயிற்சி வகுப்பு

3—4—55 மாலை 6-30 மணியளவில் திராவிடரகத்தில் ப. தி. மு க., செயலாளர் தோழர் சி. த. மு. இரா. ஆரிய சங்காரன் ப- தி. மு க- சொற்பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்து சொல்லாற்றல் என்பது குறித்து சிறந்தோர் சொற்பொழிவாற்றினர்கள்.

சொற்பயிற்சி வகுப்புப் பொறுப்பாளர் தோழர் பி. எல். செல்லையா வகுப்பிற்கு தலைமை வகித்தார். பல தோழர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

தோழர்கள் வடவைக்குயில், த. மு. பொற்கோ ஆகியோர் சொற்பயிற்சி மாணவர் கடமை குறித்து பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின், ப. தி. மு. க. செயலாளர் அனைவருக்கும் நன்றி அறிவித்ததோடு, கிழமை தோறும் ஞாயிறு, வியாழன் ஆன நாட்களில் வகுப்பை நடத்துமாறும், ஆண்டின் இறுதியில் சிறந்தவர்க்கு நற்சான்றிதழும் பரிசிலும் அளிக்க ஆவன செய்யப் படுமெனவும் கூறினர்கள். இரவு 9-30 மணியளவில் கூட்டம் கலைந்தது

வாழ்த்திடுவோம்!

"பூவையான்"

மாலை யெனும் பொல்லா வேளைவந்து—அந்த
மாதை யென் னென்னவோ செய்கிறது!

உள்ளங் துடிக்க உடல்பதற—அவள்
ஊணுறக்க மின்றிக் காத்திருந்தாள்.

வானப்பூஞ் சோலையில் பூத்திருக்கும்—முழு
வெண்மதி போன்ற முகத்தழகி

வண்டாடும் சோலையில் சென்டாடியே—அவள்
வழியில் விழிவைத்துக் காத்திருந்தாள்.

பூத்தப் புதுமலர் தேன்குடிக்க—அந்தப்
பொன்வண்டு ஏனின்னுங் காணவில்லை?

மாங்கிளை மேலொரு பூங்குயிலும்—இசை
மாரி பொழியுது நாள் தோறும்

மாடப்புறு அதன் பேடுடனே—கூடி
ஊடல் புரியுது ஓர்புறத்தில்.

வானப்பெருநகர் வீதியிலே—சுற்றி
வட்டமிட்டாடும் நிலவழகி.

தென்றலைச் சூதாகத் தூதனுப்பி—இள
மென்மலர் தையலை வாட்டுகின்றாள்!

மல்லிகை முல்லை மருக்கொழுந்து—மண
மாரி பொழியும் மனோரஞ்சிதம்.

அத்தனைப் பூக்களும் ஒன்றுகூடி—அவள்
அத்தான் நினைவை அதிகரிக்க.

நேற்றிரவு இந்தத் தோட்டத்திலே—வந்து
நேசக் கரத்தால் தழுவியவன்;

சாதியில்லை மதப் பேதமில்லை—என்று
சாதித்து வாதாடிப் பேசியவன்

"விதவை என்றுன்னைப் பழித்தாலும்—ஊரார்
வீம்புடன் பேசித் தடுத்தாலும்;

எச்சிற் பழமென்று ஏசினாலும்—என்னை
ஏளனம் செய்தவர் தூற்றினாலும்;

பட்டமரத்து நிழலொதுங்கும்—படு
பாவி என்றென்னை இகழ்ந்தாலும்;

கசக்கி யெறிந்த மலர் தனையே—இவன்
கண்களில் ஒற்றி மகிழ்வடையும்,

பேதலித்த மனங் கொண்டவனோ?—அன்றிப்
பித்தம் பிடித்து அலைபவனோ?

என்றெல்லாம் மற்றவர் தூற்றினாலும்—உன்னை
என்றென்றும் நான் கைவிட மாட்டேன்

கண்டவர் எள்ளி நகையாடி—என்னைக்
காரியுமிழ்ந்து பழித்தாலும்,

கண்டெடுத்த இந்தக் கட்டிமுத்தை—நான்
கைதவறியும் விடமாட்டேன்."

இவ்வாறு பற்பல பேசியவன்—ஏன்
இன்னும் இங்கு வரக்காணோம்?

"கால்காசு சொத்தும் தரமாட்டோம்"—என்று
கண்டித்துப் பெற்றோர் மறுத்தனரோ?

"வீட்டைவிட்டு வெளியேற்றிடுவோம்" என்று
வெட்டொன் றிருதுண்டாய்ப் பேசினரோ?

"அய்யோ! இனியென்ன செய்திடுவேன்—என்னை
ஆதரிப்பார் யாருங் காண்கிலனே!

தாலி அறுத்தவள் இன்பத்துக்கு—முழு
வேலி யமைப்ப தநீதி யன்றோ?

கண்ணீர் சொரிந்து கதறுகின்ற—இந்தக்
கைம்பெண்ணைக் காக்கத் துணையில்லையோ?"

'ஏனில்லை? நானிதோவந்து விட்டேன்--கண்ணே!
ஏங்காதே, தூண்டாமணி விளக்கே!'

ஓடோடி வந்தான் உளங்கனிந்து—அவள்
ஒய்யாரமா யெதிர்சென்று நின்றாள்

கட்டியணைத்துக் கதை பேசி—அந்தக்
காதலர் சிட்டாய் பறந்துவிட்டார்

வானத்து வெண்மதி வாழ்த்துரைக்க—அந்த
வானம்பாடிகள் வழிநடந்தார்

பேசாத வீணையைப் பேசவிட்ட—அந்தப்
பேசும் இளைஞனை வாழ்த்திடுவோம்.

பேராசிரியர் பேசுகிறார்...தொடர்ச்சி

உணர்ந்து சொல்லி யிருக்கிறார். அவசியமில்லாதவற்றிற் கெல்லாம் வரம்புகட்டி வாழ்ந்ததனால்தான் நம் சமுதாயம் கூட வீழ்ந்து பட்டது. கட்டுப்பாடு அவசியம்தான். கட்டுப்பாடு இல்லாத நாடும், இனமும், மொழி வளமும் கால வெள்ளத்தில் வளர்ச்சியில் குன்றித்துபடும் என்பதை உணர்கிறேன். அத்தோடு கட்டுப்பாடு வேண்டாத பகுதிகளுக்கும் இந்த விதியைப் பயன்படுத்தினால் கட்டுப்பாட்டின் பயன் அழிவதோடு போரும் பிணக்கும் வளர எளிதாகும் என்பதையும் உணர வேண்டும்.

கல்லூரியில் கட்டுப்பாடு மிக அவசியமானது. பேராசானுக்கு பணிந்தும் எதிர் கால வாழ்க்கைக்கு ஏற்ற நூல்நயம் கற்றும் பிற நண்பர்களோடு ஒன்றித்துப் பழகும் பழக்கமும் மாணவர்களுக்கு மிகஅவசியம் தான். கல்லூரியின் கட்டுப்பாட்டிற்காக மாணவன் தன் உரிமையைப் பலியிடுவதாக எண்ணத்தக்க விதி எதுவானாலும் சரி விலக்கப்பட வேண்டியதுதான். மாணவர்களின் ஒன்றிப்பு பேராசானுக்கும் பேராசானின் ஒன்றிப்பு மாணாக்கனுக்கும் தேவைப் படுகிற காலமிது. அவரவர் தன் மதிப்பையும் உரிமையையும் பாதுகாத்துக்கொள்ள விரும்பும் காலம் இது. அப்போதெல்லாம் திண்ணைப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் கடமையை மட்டும்தான் உணர்ந்திருந்தார்கள். ஆனால் இன்றோ உரிமையையும் தாய்மை உணர்ச்சியையும் கொண்டுள்ள முத்துக்களாக மாணவர்கள் கல்லூரிகளில் திகழ்வதைக் காணுகிறேன்.

எப்படி என் அறியாத் தன்மையால் முதல் மகன் தாரை மணி ஒழுக்கப் பாதையினின்று நழுவிச் சென்றானே அதேபோலத் தான் மாணவர்களும் கட்டுப்பாட்டை மீறி விட்டனர். கருத்து வேற்றுமை கருதி பேராசிரியத் தலைவர் அந்த உத்தமன் நாராயணசாமியை கல்லூரி அரங்கில் பேச அனுமதிக்கவில்லை. இது நாராயணசாமிக்கல்ல இழுக்கு. கல்லூரி மாணவர் மன்றத் தீர்மானித்திற்கே பேராபத்தாயிற்று. மாணவர்கள் உரிமை பறிமுதலாக்கப்பட்டதாக எண்ணுகிறார்கள். அந்த எண்ணத்தை வளர்த்தது கூட இந்த கல்லூரியின் முதல்வர்தான். நல்லவர்களாக இருந்த மாணவர்களைப் பகைமுகம் காட்டி, விரோதியாக எண்ணினர். முடிவில் அவரே கலங்குகிறார்.

இதே நிலைமையைத்தான் சமுதாயத்திலும் காண்கிறேன். சமுதாய நலன் கருதும் இணையற்ற தலைவர்களைக் கொள்கை முகத்தால் இழிவு படுத்தி பேசும் கெட்ட பழக்கம் சமுதாயத்தில் பெரிதும் மலிந்து விட்டது.

ஒரு கல்லூரி முதல்வர் மாணவர்களை ஒன்றும் அறியாத பிஞ்சுகள் என்று எண்ணுகிறார். ஓரளவுக்கு உண்மைதான் அது. பசு சாதுவானதுதான் என்பதற்காக மனிதன் வலியப் பகைக்கும்போது முட்டக் கூடாது என்று தடை விதித்தாலும் சும்மா இருந்து விடுமா? சாந்தமான முறையில் மாணவர்களோடு முதல்வரும் ஒத்துழைத்திருக்கலாம். அந்த உத்தமன் நாராயணசாமியையே அழைப்பித்து மிருக்கலாம். மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் இடையே தெளிவையும் கூட உண்டாக்கியிருக்கலாம்.

இந்த அரிய பாடம் கல்லூரி முதல்வருக்கு மட்டுமல்ல; ஆளும் பொறுப்பேற்றுள்ள அரசாங்கம் கூட இதனை உணர வேண்டும். இது மறுமலர்ச்சிக் காலம்; விடுதலை உணர்ச்சி நாடெங்கும் பரவியுள்ள காலம் இது; தொழிற்துறையிலும் அரசியற் போக்கிலும் வாழ்க்கை அந்தஸ்திலும் உரிமையைக் கேட்கும் காலம் இது. எனவே அரசாங்கப் பொறுப்பு மக்கள் கூட்டத்தின் பகைமைப் பொறுப்பாக இருக்கக் கூடாது. மக்கள் கூட்டம் விரும்புவதை ஒலிக்கும் கருவியாக இயங்க வேண்டும். அப்போது தான் ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் உள்ள இடைவெளி குறைவுபடும். ஆளப்படுவோர் ஆள்வோர் மீதும், ஆள்வோர் ஆளப்படுவோர் மீதும், நம்பிக்கையைத் தட்டி எழுப்பவேண்டிய பருவம் இது தான். எனவே கடமை உணர்ச்சியை உணர்ந்தஅளவுக்குஉரிமை உணர்ச்சியையும்காக்க அரசாங்கம் ஆக்கப்பணி செய்தல்வேண்டும்.

குறிப்பாக இந்தக் காலத்து அமைச்சர்களின் சொற்பொழிவுகள் கூட ஒரு வகையான கடமையைக் காட்டுவதாகவே உள்ளது. நாடெங்கும் அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்கிறார்கள்.

உற்பத்தியைப் பெருக்குவதிலும் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதிலும் மக்கள் உழைப்பும் ஒத்துழைப்பும் தேவைஎன்றவாறெல்லாம் பேசும் அவர்கள் மேடைப் பிரசங்கம் ஏதோ ஒரு யந்திர உழைப்பையே நினைவூட்டுகிறதே யல்லாமல் ஏதும் புதிய எண்ணங்கள் மிளிர்வதாகத் தெரியவில்லை.

கட்டுப்பாடு மிகமிக அவசியம்தான். ஒரு நாட்டின் கட்டுக்கோப்பான எண்ணமும் உறுதியும் சிதைவுற்றுவிட்டால் விழிப்புணர்ச்சியும் முன்னேற்றமும் பெரிதும் குன்றிப் போய்விடும் என்பது முழு உண்மை. கட்டுப்பாடு குன்றிய கல்லூரிகளும் ஒன்றித்த பொதுநோக்கு அழிந்து பட்ட அரசாங்கமும் எந்தவிதமான முன்னேற்றத்தையும் எய்த இயலாது என்பதும் ஓர் உண்மைதான். பெரும்பாலான நிர்வாகம் சிதையுறுவதே இந்த உயர்ந்த கட்டுக்கோப்பு இலட்சியம் சிதைவடைவதனால் தான். ஆனால் கட்டுக்கோப்பைக் கருதி மக்களின் உரிமை இழந்து படக்கூடாது. எங்கள் கல்லூரி பேராசிரியரும் கூட இப்படிப்பட்ட கட்டுக்கோப்பான ஒன்றிப்பை எதிர்நோக்கித்தான் கல்லூரி மாணவர் குழுவின் உரிமையைத் தகர்க்க முனைந்தார். முடிவில் மாணவர் தம் உரிமை அழிந்து பட்டதோடு கல்லூரிக் கட்டுப்பாடும் தகர்ந்தது.

—(தொடரும்)

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

12

நாட்டு வரலாறு

நாட்டு வரலாறு என்பது ஒரு சமுதாயத்தின் கடந்தகால—நிகழ்கால இன்ப துன்பங்களை நினைவு படுத்தி, வருங் காலத்திற்கு அழைத்துச் செல்லக்கூடிய ஒரு சாதனமாகும்.

ஒரு நாட்டு மக்களின் துன்பகாலச் சரித்திரம் இன்னொரு நாட்டாருக்கு இன்ப காலச் சரித்திரமாகும், ஒரு நாட்டாரின் சுகம் மற்றவருக்குத் துக்கம்! இது இயற்கை!

கடந்த உலகப் போரின் இறுதியான 1945-ம் ஆண்டை, ஜெர்மானிய சரித்திரம் துக்ககரமாக வர்ணிக்கும். ஜெர்மானிய மக்களின் நல்வாழ்வுக்காக உலகத்தையே அதிரச் செய்த மாவீரன் அடால்ப் ஃகிட்லர் மறைந்தான். ஜெர்மனி பணிந்தது—எதிரிகளின் வேட்டைக்காடாயிற்று. இந்த சம்பவம் ஜெர்மனியின் சரித்திரத்தில் இரத்தக் கண்ணீரால் எழுதப்பட்டிருக்கும்.

அதே போரின் இறுதியை பிரிட்டிஷாரின் சரித்திரம் இன்பகரமாக வர்ணிக்கும். ஏன் வர்ணிக்காது? தூரக்கிழக்கில்—அச்சு நாடுகளின் தாக்குதலால்—பிரசித்திப்பெற்ற பிரின்ஸ் ஆப் வேல்ஸ்—ரிபல்ஸ் என்கிற கப்பல்களை இழந்து—சிங்கப்பூரையும் பர்மாவையும் இழந்து, இங்கிலாந்தையும் இழக்க நேருமோ என்கிற அளவுக்கு தோற்றிருந்த பிரிட்டிஷார், தோற்ற இடங்களையெல்லாம் மீட்டி ஜெர்மனியிலேயே கூடாரம் அடித்த ஆண்டல்லவா அது!

எனவே, இந்த சரித்திரங்கள் இரண்டும் பிரிட்டிஷாரையும், ஜெர்மானியரையும் என்றென்றும் பிரித்துவைக்கக் கூடியது என்கிறோம்—எவரும் மறுக்க முடியாது.

இத்தகைய இரு வேறு சரித்திரங்களைக் கொண்ட மக்கள், என்றைக்காவது ஒரே ஆட்சியின் கீழ் இருக்கச் சம்மதிப்பார்களா?

ஏறக்குறைய பிரிட்டிஷ் செர்மானிய சரித்திரங்களைப் போன்றவையே வடஇந்திய—தென்னிந்திய சரித்திரங்கள்!

இரண்டும் மிகப்பழங்காலந் தொட்டே இருவேறு சரித்திரங்களைக் கொண்டிருக்கின்றன. இந்தியா ஒரே நாடாக இருந்திருக்குமானால் தென்னிந்திய சரித்திரம் என்றும், வடஇந்திய சரித்திரம் என்றும், தனித்தனிச் சரித்திரங்கள் இருக்க முடியாது.

ஒரே நிலப்பரப்பில் வாழுகின்ற மக்களுக்கு இடையில் சரித்திரங்கள் வேறுபடுவதற்குக் காரணம், யுத்தம் ஒன்று மட்டுமல்ல! அந்தந்த மக்களுக்கிடையே தொடர்ச்சியாக நின்று நிலவி வந்த அரசாட்சிகள்! அந்த அரசாட்சிகளின் அடிப்படையான சமூகப்பண்பு! பொருளாதார நிலை! ஆகிய இவைகளும் காரணங்களாகும். சமூகப் பண்பும் பொருளாதார நிலையும் சரியில்லை என்றால் நிலையான அரசாட்சி இருக்க முடியாது.

வடஇந்தியாவில், கிரேக்க வேந்தன் மகாஅலக்சாண்டர் படை எடுத்து வந்த காலத்திலிருந்து, கஜினி முகம்மது, கோரி போன்றவர்களினால் அடுத்தடுத்து நிகழ்ந்த அந்நியப்படை எடுப்புகள், வடவர்களின் அமைதியைக் குறையாடியது மட்டுமல்ல—அவர்களுடைய சமூக அமைப்பையே சீர்குலைத்து விட்டது. பல்வேறு இனக்கலப்புகளால் நிறைந்த மனிதக் கும்பலில் தேசிய மனப்பான்மை எப்படி ஏற்பட முடியும்? எனவே. காட்டிக்கொடுத்து வயிறு வளர்ப்பவனும், கூட்டிக் கொடுத்து காசு சேர்ப்பவனும் மலிந்தனர்.

இதனால், ஆயிரக்கணக்கான குட்டிமன்னர்கள் முளைத்தனர். அவர்களுடைய மத்தியில் "நீ சிறியவன்—நான் பெரியவன்" என்கிற அடிப்படையில் முளைத்த உள்நாட்டுப் போர்கள், வடஇந்திய சமூக அமைப்பை சிதறடித்து நீண்ட காலமாகச் சீர்குலைத்து வந்திருக்கின்றன.

ஈவிரக்கமின்றிக் கொலை செய்யத் துணிந்தவனும், ஏழுமுறை மூலதனமிட்டு பட்டாக்கத்தி வாங்கியவனும் அரசாள முயன்றிருக்கிறான்! அத்தனைக்கும் வடஇந்தியா ஆதரவு காட்டி வந்திருக்கிறது.

ஒரு ஆண்டில் பாலிமொழி அரசாளும்! அடுத்த ஆண்டில் உருதுமொழி அரசாளும் எல்லாக் காலங்களிலும், தாடியும், கோவணமும், முப்புரி நூலும் சமஸ்கிருத மொழியால் அரசாளும்!

கடந்த 10 நூற்றாண்டுகளுக்கு இடையில் வடஇந்தியாவுக்கு அமைதியான காலம் எது என்பதை ஆராய்ந்தால், அவர்களால், நன்றிகெட்டத்தனமாக வெறுக்கப்படுகிற பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலமே 'பொற்காலம்' என்று துணிந்து கூறலாம்.

"வடஇந்திய ஏகாதிபத்தியம் தோன்றிய பிறகு பொருளாதாரத் துறையில் வடவர் பெரிதும் முன்னேற்றம் அடைந்திருக்கவில்லையா?" என்று கேட்கலாம். முன்னேற்றம் அடைந்திருப்பது உண்மைதான். ஆனால் அதற்கு ஈடான அளவில் நவகாளி வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது.

என்னவெனில்; தற்போது வடவர் அடைந்துள்ள முன்னேற்றத்திற்காக இந்தியாவை அடமானம் வைத்து வாங்கியுள்ள மிகப் பெருங்கடன், வருங்கால அமைதியைக் கொண்டுதான் அடைபட வேண்டும். இதை ஆலோசிக்கும்போது வடவர்களின் வருங்காலத்தில் எவ்வளவு முன்னேற்றம் நிலை பெறும் என்பதைக் காலம்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

ஏனெனில், வடஇந்தியா இன்றுவரை அமைதியற்ற வாழ்வில்தான் இருந்து வருகிறது. "அப்படி அமைதிக்குறை ஏற்பட என்ன இருக்கிறது" என்று கேட்கலாம். காரணங்கள் இருக்கின்றன,

பாகிஸ்தான் படை எடுப்புப் பற்றிய அச்சம் வடஇந்தியாவுக்கு நீங்கிய பாடாக இல்லை! இந்த அச்சம் குறுகிய காலத்திற்குள் நீங்கும் என்று சொல்லக்கூடியதாகவும் இல்லை.

பாகிஸ்தான், அமெரிக்காவின் காலடியில் அடைக்கலம் புகுந்து விட்டது. இந்தியாவோ, அமெரிக்காவுக்குத் தலையைக் காட்டி — இரஷ்யாவுக்கு வாலைக் காட்டி 'விலாங்கு' வேஷம் போடுகிறது. அதுமட்டுமா? அமெரிக்கா 'டாலர்' கொடுத்தாலும் புன்முறுவலோடு பெற்றுக் கொள்கிறது. இரஷ்யா இயந்திரம் கொடுத்தாலும் கடைக்கண்ணால் நன்றி செலுத்திப் பெற்றுக்கொள்கிறது.

இந்த அரசியல் வேசித்தனம் நல்ல பலனைத் தராது என்று, தென்னிந்தியப் புராணீகர் திரு. ஆச்சாரியாருக்குக் கூடத் தெரிகிறது.

சென்னை மைலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மாணவர் விடுதிப் பொன்விழா கடந்த 6—3—55-ல் நடைபெற்றது. அதில், தலைமை தாங்கிய திரு. ஆச்சாரியார் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

"இப்போது நாம் பிறருடைய தருமத்தை எதிர்பார்க்கும் புதிய மனோபாவம் ஒன்றை வளர்த்து வந்திருக்கிறோம். அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிடமிருந்து தருமம் வாங்குவதற்குக்கூட நாம் தலைப்பட்டுவிட்டோம். பிறநாடுகள் அளிக்கும் தர்மத்தை நாம் எதிர்பார்க்கிறபோது என் மனப் புண்படுகிறது. இது நம்முடைய சுதந்திரத்தை காப்பதல்ல—இழப்பதாகும்,"

என்று பேசியிருக்கிறார். திரு. நேருவோ ஆதியில் அமெரிக்க யாத்திரை செய்தார். பின்னர் சீன யாத்திரை நடத்தினார். இந்தியாவின் 'அந்தஸ்து' உயர்ந்துவிட்டதாக இங்குள்ள அப்பாவிகள் கூறுகிறார்கள். இந்தியாவுக்கு 'பிச்சைக்காரபுத்தி' வளர்ந்து விட்டதாக சொல்லாமல் சொல்கிறார் ஆச்சாரியார். "உலகிலேயே மிகவும் பட்டினி கிடக்கும் நாடு இந்தியா ஒன்றுதான்" என்று ஐக்கிய நாடுகள் சபை கூறியிருக்கிறது, இதில் எது உண்மை என்பதை பொதுமக்கள் தீர்மானிப்பாராக. யார் என்ன சொன்னாலும் சரி இந்தியாவைப் பெருங்கடனுக்குள் ஆழ்த்தி வடவருக்கு வளம் தேடப்பட்டிருப்பது மட்டும் உண்மை. அந்த வளம் நிலைப்படுமா என்பதுதான் நமது கேள்வி.

'இந்தியா—பாக். போர்' ஒன்று ஆரம்பித்தால், அது ஆரம்பத்தில் பழைய மதப்பூசலை அடிப்படையாகக் கொண்டிருந்து, பின்னர் உலகப் போராகப் பரிணமித்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதற்கான தீயசக்திகள் இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் நிலையாக வேலை செய்து வருகின்றன.

தென்னிந்திய சரித்திரம், வடஇந்திய கலவரங்கள் எதனோடும் தொடர்பு கொண்டதல்ல. 1857-ல் வடக்கே நடந்த சிப்பாய்க் கலகமும், 1947 வரை நடந்த நவகாளி போன்ற மதப்பூசலும் தென்னிந்தியாவுக்கு எட்டவில்லை என்பதே, வடக்கும் தெற்கும் மாறுபட்ட பண்பாடு, வரலாறுகளைக் கொண்ட இரு வேறு நாடுகள் என்பதை வலியுறுத்தும்.

தென்னிந்தியாவின் சரித்திரங்களில் ஒன்றுகூட வடஇந்திய உறவு குறித்துப் போதிப்பதாக இல்லை. மாறாக அடிக்கடி நடந்த போராட்டங்களையே போதிக்கின்றன. தென்னிந்தியா தனக்கென தனிச்சரித்திரம் பெற்றிருப்பதே போதுமான சான்றாகும். இதனை மாணவர்களும் கூட நன்குணர்வார்கள்.

வடஇந்திய சரித்திரம் இராமாயணத்தை—இதிகாசக்கதையை— ஆதாரமாக வைத்து ஆரம்பிக்கப்படுவதும், தென்னிந்திய சரித்திரம் சேர, சோழ, பாண்டியர்களை முதலில் கூறி ஆரம்பிக்கப்படுவதும் ஏன்? இந்தியா ஒரே நாடாக இருந்தால் சரித்திரம் இரண்டு பிரிவாகவா இருக்கும்! இதுமட்டுமா?

வடஇந்தியாவில் தோன்றிய அசோகன் அக்பர், ஔரங்கசீப், அலாவுதீன் கில்ஜி ஆகியோர்களுடைய சாம்ராஜ்யங்கள் தென்னிந்தியாவுக்கு எதிர்ப்பையே காட்டி வந்திருக்கின்றன.

அதுபோலவே, சேர, சோழ, பாண்டிய, ஆந்திர சாம்ராஜ்யங்கள் வடஇந்தியாவுக்கு எதிர்ப்புக் காட்டியே வந்துள்ளன.

இத்தகைய எதிர்ப்புக்குக் காரணம், அவ்வப்போது தோன்றிய வடஇந்திய தென்னிந்திய சாம்ராஜ்யங்கள் ஒன்றையொன்று அடக்கியாள முயன்றதே யாகும்.

இதில், இரண்டு விஷயங்களை ஏக இந்தியாவாதிகள் கவனிக்க வேண்டும். அது வருமாறு:—

1. வட இந்தியாவில் ஏதாவது ஒரு பேரரசு தோன்றும் போதெல்லாம், அது, தென்னிந்தியாவை அடக்கியாள முயன்று தோற்றிருக்கிறது.

அது போலவே, தென்னிந்தியாவில் தோன்றிய ஒவ்வொரு பேரரசும் வட இந்தியாவை அடக்கியாள முயன்று தோற்றிருக்கிறது.

நாம், இங்கு தோல்வி என்று குறிப்பிடுவது, படையெடுத்துச் சென்றதையோ, நாட்டை வென்றதையோ, சிலகாலம் வரை அடக்கி ஆண்டதையோ மறுத்து—மறைக்கும் நோக்கத்துடன் அல்ல! அவ்வாறு அடக்கியாண்ட அரசர்களும் இரண்டொருவர் இருந்தனர்! ஆனால், அந்த ஆட்சி அவர்களின் தோள் வலிமைக்கு உதாரணமாக சிலகாலம் இருந்துவிட்டு, பின்பு, வடக்கு வடக்காகவும், தெற்கு தெற்காகவும் இருந்ததே தவிர இரண்டும் ஒன்றாகவில்லை. வட இந்திய சரித்திரமும், தென்னிந்திய சரித்திரமும் ஒழிந்து, இந்திய சரித்திரம் ஏற்படவில்லை, என்று எடுத்துக்காட்டுவதே நமது நோக்கம்.

2. யார் யாரோ படை எடுத்தார்கள் வென்றார்கள்—ஆட்சி புரிந்தார்கள்—என்பது போன்ற வடஇந்திய சரித்திரமல்ல—தென்னிந்திய சரித்திரம்!

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே அநாதி காலத்தே தொடங்கிய, சேர, சோழ பாண்டிய அரசுகள், நிலையாக கி. பி. 14-ம் நூற்றாண்டுவரை ஆட்சி புரிந்தன.

இந்த ஆட்சிகள் சில சமயம் வலிமை பெற்றன. சிலசமயம் தளர்வடைந்தன. பல்வேறு சமயங்களில் ஒன்றை யொன்று மேலாதிக்கம் செலுத்தின.

ஆனால் அழிந்துபோகவில்லை. வட இந்தியாவில் அழிந்துபோன அரசுகளுக்கு கணக்கே இல்லை. குறிப்பாக இதிகாச ராமனுடைய அரச பரம்பரை எந்நாள்வரை இருந்தது? அதற்குப் பின்னால் நிலையான ஆட்சி புரிந்த நெடிய பரம்பரை எது? இந்தக் கேள்விகளுக்கு பதிலே கிடைக்காது. இதனை ஏகஇந்தியா வாதிகள் மனதில் வைப்பாராக.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆட்சி புரிந்த இம்மூவேந்தர் பரம்பரையில், அசாத்தியமான கொடியவன், மாபெரும் கோழை அடிமுட்டாள் என்று வர்ணிக்கத்தக்கவன் ஒருவன்கூட இல்லை. இதற்கு நேர்மாறான அரசர்கள் பலர் வடக்கில் இருந்தனர்.

தென்னாட்டில் இருந்ததுபோல் இவ்வளவு நீண்ட நாள் ஆட்சி உலகிலேயே எங்கும் கிடையாது. இந்தப்பெருமை தென்னாட்டான் ஒவ்வொருவனுக்கும் எண்ணி மகிழத்தக்க ஒன்று.

இத்தனை பெருமைக்குரிய மக்கள், அரசியல் விழிப்படைந்தபோது—தேசிய உணர்ச்சி பெற்றபோது — தங்களுடைய சுதந்திரத்தையும் தன்மானத்தையும் வடவர்களுக்கு அடிமைப் படுத்திவிட்டு, மண்ணுண்ட மன்னன் கிண்ணிப்பிச்சை எடுப்பதுபோல், எடுத்ததற்கெல்லாம் வடநாட்டுக்கு விண்ணப்பம் போட்டு காவடி தூக்கவும், நாட்டை வேட்டைக் காடாக்கவும் ஒருப்படுவார்களா?

சிலப்பதிகாரம்

விருந்து மண்டபத்தில் கூடிய வடநாட்டு வேந்தர்கள், தமிழ் மன்னர்களின் வீரத்தை இழித்தும் பழித்தும் பேசினார்கள். அதனை ஒற்றர் மூலம் அறிந்தான் சேர நாட்டு வேந்தன் செங்குட்டுவன். கடுஞ்சினங் கொண்டான்.

"வடதிசை மருங்கில் மன்னர்தம் முடித்தலை
கடவுள் எழுதஓர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாள்வாய் ஆகில்
செறிகழல் புனைந்த செருவெம் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉம் கோலேன் ஆகுக"

என்று வெஞ்சூள் உரைத்தான். போர் முரசு முழங்கியது. வீரர்கள் திரண்டனர். செந்தமிழ் வீரர்காள்! வாய் கொழுத்த வடதிசை வேந்தரை வாள் முனையில் சந்திப்போம். கங்கைக் கரைக்குப் புறப்படுங்கள். என்றான்.

'உலகம் மன்னவன் ஒருங்குடன் சென்றாங்கு
ஆலும் புரவி அணிதேர்த் தானையொடு
நீலகிரியின் நெடும்புறத்து இறுதாங்கு
ஆடியல் யானையும் தேரும் மாவும்
பீடு கெழு மறவரும்........."

படைசூழப் புறப்பட்டனர். கங்கையாற்றைக் கடந்து உத்தர நாட்டில் புகுந்து பாசறையில் தங்கி இருந்தான் சேரன் செங்குட்டுவன். அந்த தகைப்பரும் தானை மறவோனை எதிர்த்து, உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் முதலிய வடதிசை வேந்தர் அனைவரும் சூழ்ந்துவர நால்வகைச் சேனையுடன் கனகனும் விஜயனும் படுகளம் தேடி வந்தனர். இரை வேட்டைக்கு புறப்பட்ட சிங்கம் யானைக் கூட்டத்தைக் கண்டு பாய்ந்ததுபோல் சேரன் செங்குட்டுவன் போரில் பாய்ந்தான். வாய் வீரத்தால் தமிழனை இகழ்ந்த காய்வேல் பிடித்த கனகனும் விசயனும் அவர்களுக்குப் படைத்துணை வந்த 52 தேர் வீரர்களும், காலாட்படையினரும், மற்றவரும் திசைக்கொருவராக மாறுவேடமிட்டு ஓடினர். அவர்களைப் பிடித்து இமயமலையில் உடைத்தெடுத்த கல்லேற்றி சேரநாடுவரை சுமக்கச் செய்தான் செங்குட்டுவன். அவனுக்கு உறுதுணையாய் நின்றவன் அவனுடைய மதிமந்திரி வில்லவன்கோதை என்பான். அதனை இளங்கோவடிகள் வாக்காலேயே காண்போம்.

"பகைப்புலம் புக்குப் பாசறை இருந்த
தகைப்பரும் தானை மறவோன் தன்முன்
உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன்
சித்திரன் சிங்கன் தனுத்தரன் சிவேதன்
வடதிசை மருங்கின் மன்னவர் எல்லாம்
தென்தமிழ் ஆற்றல் காண்குதும் யாம் [எனக்
கலந்த கேண்மையில் கனக விசயர்
நிலந்திரைத் தானையொடு நிகர்த்து மேல்வர
இரைதேர் வேட்டத்து எழுந்த அரிமா
கரிமாப் பெருநிரை கண்டுஉளம் சிறந்து
பாய்ந்த பண்பில் பல்வேல் மன்னர்
காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப
வாய்வாள் ஆண்மையில் வண்தமிழ் இகழ்ந்த
காய்வேல் தடக்கைக் கனகனும் விசயனும்
ஐம்பத் திருவர் கடுந்தேர் ஆளரோடு
செங்குட்டுவன் தன் சினவலைப் படுதலும்
சடையினர் உடையினர் சாம்பல் பூச்சினர்
பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர்
பாடு பாணியர் பல்லியத் தோளினர்
ஆடு கூத்தர் ஆகி எங்கணும்
ஏந்துவாள் ஒழிய தாம்துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயிற் [படர்தரக்
கச்சை யானைக் காவலர் நடுங்க
கோட்டுமாப் பூட்டி வாட்கோல் ஆக
ஆள் அழி வாங்கி அதரி திரித்த
வாளேர் உழவன் ....
....
வில்லவன் கோதையொடு வென்று வினை [முடித்த
பல்வேல் தானை படைபல ஏவி
பொற்கோட்டு இமயத்துப் பொருவறு பத் [தினிக்
கற்கால் கொண்டனன் காவலன்..."

வீரர்கள் சென்றனர் வீண்ரை வென்றனர். கனக விசயர்கள் தலையில் கல்லேறியது! சேரன் செங்குட்டுவன் தோளில் வாகை மாலை ஏறியது. இந்த இரண்டு செய்திகளையும் திண்வார் முரசம் உலகறியத் தெரிவித்தது.

இந்த வீரம் செறிந்த வரலாறு தமிழர்களுடையது. இதனை படிக்கும் தோறும் படிக்கும் தோறும் தமிழனுடைய தோள்கள் செம்மாந்து பெருத்துவிடுகின்றன. இந்த சரித்திரத்தை வடவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

பக்கத்து நாடுகளில் பகைவரில்லாக் காரணத்தால் தினவு கொண்ட தோளோடு 'திக்விஜயம் செய்தான் சோழர்குலப் பெருவேந்தன் திருமாவளவன் கரிகாலன். வடநாடு சென்றான். இமயத்தில் புலிக்கொடி பொறித்தான். வெற்றியோடு திரும்பினான். அப்படித் திரும்புங் காலையில் வச்சிரநாட்டு வேந்தன் (வச்சிர நாடு சோணையாற்றங் கரையில் உள்ளதாம்) முத்துப் பந்தர் ஒன்றைத் திறையாகக் கொடுத்தான். மகத நாட்டரசன் பகைத்துத் தோற்று பட்டி மண்டபத்தைத் திரையாகக் கொடுத்தான். அவந்தி மன்னன் தோரண வாயில் ஒன்றை உவந்தளித்தான் என்று நமது மாபெரும் வீரகாவியமான சிலப்பதிகாரம் கூறுகிறது. இவைகளை வடவர்கள் தமது வீரகாவியமாக ஏற்றுக்கொள்வார்களா? அந்தக்காவியம் நமக்கு இன்பம் தருவதுபோல் அவர்களுக்கு இன்பம் தருமா?

பிரிட்டிஷாரின் வீரச் செயல் ஜெர்மனியருக்கு இன்பம் தருவதாகவா இருக்கும்?

இதனை இவ்வளவோடு நிறுத்திவிட்டு பரம்பரைக் கலைகளைப்பற்றி ஆராய்வோம்.

(தொடரும்)

ஆசிரியருக்குக் கடிதம்

மதமாம் மதம்!

அன்புசால் ஆசிரியருக்கு வணக்கம் கணக்கில

கல்கண்டு 10-4-55 இதழைக் கண்டேன் --வியப்புமிகக் கொண்டேன். முன்னூறு குடும்பங்கள் கிறித்துவ மதத்திலிருந்து இந்துவாக மாறிவிட்ட 'வெற்றி'ச் செய்தி ஒன்றை விளம்பரப்படுத்தி இருப்பதானது, 'கல்கண்டிற்கு' வடக்கன்குளம் வரலாற்றின் அரிச்சுவடிகூடத் தெரியாது என்பதைத் தான் காட்டுகிறது.

வடவை என்று செல்லமாக அழைக்கப்படும் வடக்கன்குளம், 'சின்னரோமாபுரி' என்ற சிறப்புப் பெயர் பெற்று கத்தோலிக்க மதக்கருங்கல் கோட்டையாக இருந்த காலம் ஒன்றுண்டு. ஆனால் மதவாதிகள் நடாத்திய சாதித்திமிர் போன்ற பழமைக் கருத்துக்களுக்கு எதிராக போராட்டங்கள் பல நடத்தி இன்று மதம் என்பது ஒரு சில சுயநலமிகளின் சுகபோக கூடாரமென்பதையும் மதம் மதமே என்பதையும் தெள்ளத் தெளிவுற உணர்ந்து எம்மதமும் தேவையில்லை என்று பெருவாழ்வு வாழ்ந்து வருகின்றனர், வடவையர்.

இருந்தும் சில பக்த சிகாமணிகள் வடவை வீதிகளிலே வலம் வருவதின் உண்மை இரகசியம் ஊர் அறிந்து கிடக்கிறது.

சரிந்து விழும் சனாதனத்திற்கு முட்டுக் கொடுக்க சில ஆதினங்களின் கிருபாகடாட்சத்திற்கு ஆசைப்பட்டு சிலர் புதுக்கோலம் போட்டிருக்கிறார்களென்றால் அது உண்மையிலேயே பரிதாபப்படுவதற்குரிய விஷயமாகும்.

ஏதேதோ சொல்லி ஏமாற்றி, என்னை இந்து மதத்தில் சேர்த்து விட்டார்கள் என்று சில இளங் 'குமரர்'கள் அண்மையில் நாம அழிப்பு விழாக்கள் நடத்தியது நாடறிந்த விஷயம்.

இறுதியாக வடவையின் நல்ல பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கோடு அந்த 'கல்கண்டு' விளம்பரச்சேதி வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை வடவையின் நல்ல பெயரிலே நாட்டம் கொண்டவன் என்ற முறையிலே கூறிக் கொள்கிறேன்.

அன்பன்,
வடவை. அசோா

தி. மு. க. மாவட்டக் கிளைக் கழகத் தேர்தல் முடிவுகள்

சென்ற வாரம் மதுரை, இராமநாதபுரம், வ. ஆ. மாவட்டக் கழகங்களின் தேர்தல் முடிவுகளை வெளியிட்டிருந்தோம். இவ்வாரம் தஞ்சை, நெல்லை, செங்கற்பட்டு, சென்னை, சேலம், தென் ஆற்காடு, திருச்சி, நாஞ்சில், கோவை ஆகிய மாவட்டங்களின் தேர்தல் முடிவுகளை வெளியிட்டிருக்கிறோம்.

செங்கற்பட்டு மாவட்டம்

செயலாளர் : **கே. டி. எஸ். மணி**
துணைச்செயலாளர் : **ஜே ஏ. வகாப்**
பொரு : **ஒய். என். இராமலிங்கம்**

பொதுக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு:—

சி. என். அண்ணாதுரை, சி. வி. எம். அண்ணாமலை, ஏ. கிருஷ்ணன், டி. கே. போரூரான், கே. டி. எஸ். மணி, பா. சு. மணி, என். ஜி கண்ணப்பன், இராம. அரங்கண்ணல், ஒய். என். இராமலிங்கம், ஈழத்து அடிகள்.

தஞ்சை மாவட்டம்

செ : **என். எஸ். இளங்கோ**
து. செ : **பி. நாராயணசாமி**
பொரு : **ஏ. வி. பதி**

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு:—

என். எஸ். இளங்கோ, மு. கருணாநிதி, கே. கே. நீலமேகம், அடைக்கலம், என். கிட்டப்பா, எஸ், பெத்தண்ணன், பி. நாராயணசாமி, வி. சுப்பிரமணியம், ஏ. சந்தானம், வி. பராங்குசம்.

நெல்லை மாவட்டம்

செ : **கே. வி. கே. சாமி**
து. செ : **டபிள்யூ. டி. துரைசாமி**
பொரு : **பி. எஸ். கே. ஜெயபால்**

பொதுக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு:—

கே. வி. கே. சாமி, எம். எஸ். சிவசாமி, கே. செல்லையா, பி. எஸ். கே. ஜெயபால், டபிள்யூ. டி. துரைசாமி, சு. கந்தசாமி, மு. சபாபதி, டி. ஆர். சுப்பிரமணியம் தனசேகரன், வீரபாகு.

சென்னை மாவட்டம்

செ ; **இளம்பரிதி**
து. செ : **கோ. செங்குட்டுவன்,**
பொரு : **சுந்தரமூர்த்தி**

பொதுக்குழு உறுப்பினர்கள் : —

இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், அலமேலு அப்பாதுரை, இளம்பரிதி, சத்தியவாணி முத்து, கே. எம். கண்ணபிரான், ஆர். டி. அரசு, கே. கோவிந்தசாமி, சி. டி. டி. அரசு, டி. வி. நாராயணசாமி, காஞ்சி மணிமொழியார், மு. புரட்சிமணி.

தென்ஆற்காடு மாவட்டம்

செ : **இரா. சாம்பசிவம்**
து. செ : **திண்டிவனம் தங்கவேலு**
பொரு : **ஜி. சொக்கலிங்கம்**

பொதுக்குழு உறுப்பினர்கள் :—

தில்லை வில்லாளன், இரா. சாம்பசிவம், க. அறிவழகன், பி. சொக்கலிங்கம், சி. முனுசாமி. ஏ. தங்கவேல், ச. சிவப்பிரகாசம், ந. நாச்சியப்பன், இரா. தேவநாதன், தி.நா. கோ. அண்ணாமலை

சேலம் மாவட்டம்

செ : **ஜி. பி. சோமசுந்தரம்**
து. செ : **பி. இராமலிங்கம்**
பொரு : **எம். கிருஷ்ணன்**

பொதுக்குழு உறுப்பினர்கள் : —

எம். பி. சுப்ரமண்யம் பி.ஏ., எம்.எல்.ஏ., ஜி. பி. சோமசுந்தரம், பி. இராமலிங்கம், பி. எம். குப்புசாமி, ப. கண்ணன், இரா. தாண்டவன், கே. பெருமாள், ஈ. ஆர். கிருஷ்ணன், சிற்றுளி எ. சுப்ரமண்யம், எச். எல். முருகேசன்.

கோவை மாவட்டம்

செ : **ஈ. வெ கி. சம்பத்**
து. செ : **வி. சண்முகநாதன்**
பொரு : **பி. பாலசுந்தரம்**

பொதுக்குழு உறுப்பினர்கள் :—

ஈ. வெ. கி. சம்பத், கே. எ. மதியழகன், எஸ். அப்பாவு, கோவை செழியன், எஸ். எ. ராசமாணிக்கம், ப. நாராயணன், வி. சண்முகநாதன், பி பொன்னுசாமி, பி. என் ராமானுசம், எல். எம். எஸ். நாதன்

திருச்சி மாவட்டம்

செ : **அன்பில் தர்மலிங்கம்**
து. செ : **ஜி. பராங்குசம்**
பொரு : **எஸ். ஏ. ஜி. ராபி**

பொதுக்குழு உறுப்பினர்கள் :—

அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி, ஜி. பராங்குசம், டி. பி. மூர்த்தி, எஸ். ஏ. ஜி. ராபி, எஸ். நெடுமாறன், முத்துக்கருப்பன், டி.பி. அழகமுத்து, ஐ. எம், ஷரீப், டி. கே. திராவிடமணி

நாஞ்சில் மாவட்டம்

செ ; **வி. எம். ஜான்**
து. செ : **பி. எம். கண்ணு**
பொரு : **கே. சுப்ரமண்யம்**

பொதுக்குழு உறுப்பினர்கள் :—

கி. மனோகரன், சு. வன்னிய பெருமாள், ஏ; குமாரவேல், எம். ராசகோபால், பி, எம், கண்ணு, எம். குமாரசாமி, ஜே. டேவிட், வை. சுப்ரமண்யம், பி. பத்மநாபன், ந. நடராசன்.

அடுத்த வாரம்

திராவிடன் மேதின மலரில் எல்லா மாவட்ட நிர்வாகக் குழுவின் விவரங்களும் பொதுக்குழு உறுப்பினர் அனைவரின் விவரங்களும் வெளிவரும்.

பாப்பா - ரெங்கையன்

*

11-4-55 அன்று முத்துப்பேட்டையில் தோழர் ப. நாகரெத்தினம் அவர்களின் தமையனார் தோழர் ரெங்கையன்—பாப்பா திருமணம் தோழர் ஆ மீ. அலிசேக்மன்சூர் தலைமையில் நடந்தது. தோழர் ந. தருமலிங்கம் பேசினார். இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாக வரப்பெற்றோம். நன்றி நிர்வாகி.

நடக்க இருப்பவை

சித்துக்காடு தி. மு. கழகம்

22-4-55 வெள்ளி மாலை 5-மணிக்கு சபு தோப்பு அழகிரி அரங்கில் தோழர் எ. எம். ஜெயசந்திரன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், என். எஸ் இளங்கோ, கே அடைக்கலம், பி. வடிவேல் மற்றும் பலர் பேசுவர்.

வலங்கைமான் தி மு கழகம்

23-4-55 சனி மாலை 6-மணிக்கு வலங்கை கடைத்தெரு அருகில் மாபெரும் கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், திருவிடமருதூர் எ. வி. இராமசாமி, வலங்கை அரங்கண்ணல் பேசுவர்.

முதல் முயற்சி

மாநில மாநாட்டுக்காக தி. மு. கழகம் 25 ஆயிரம் ரூபாய் பணம் திரட்டுவது என்ற பேரூர் தீர்மானத்திற்கேற்ப 21—4—55 மாலை வண்ணை தியாகராயர் கல்லூரி கலையரங்கில் சென்னைப் பங்கீட்டுக்கான நிதிக்காக புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினரால் ஆசை நினைவு நாடகம் நடைபெறும். சென்னைத் தோழர்கள் பெருந்திரளாக வந்திருந்து மாநில மாநாட்டிற்கான இம்முதல் முயற்சிக்கு வெற்றி தேடித்தர வேண்டியது இன்றியமையாததாகும்.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழகம்

இக்கழகஅமைப்புக் குழுக் கூட்டம் 24—4—55 மாலை 4-மணிக்கு கோவையில் தியாகராயர் படிப்பகத்தில் நடைபெறும். அதுசமயம் அடுத்த செயற்குழு, பொதுச் சபைக் கூட்டம், மேதின விழா ஆகியவைகள் குறித்து முடிவு செய்யப்படும். எனவே. உறுப்பினர்கள் இதனையே அழைப்பாக ஏற்று கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாக அமைப்பாளர் இரா. சுந்தரம் அறிவிக்கிறார்.

கலையுலகில் அவாளும் தொடர்ச்சி

யார் நாற்காலி தூக்கிப் போடுகிறார்கள் என்று இப்பொழுது விளக்கிக் கூற முடியுமா!

தாராவிக்கு எந்த விழா நேரங்களிலேயாவது 'அவாள்' வந்ததுண்டா! அப்படி வரும் ஒரு சிலரில் யாராவது எந்த இடத்திலேயாவது நாற்காலிகளை நகர்த்தியதுண்டா! இவாள் மட்டும் ஏன் அவாளிடம் ஓட வேண்டும்!

நாற்காலி தூக்கிப் போடுகிறது என்ன அவ்வளவு பெரிய பிரச்னையா என்பவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அங்கே போய் நாற்காலி தூக்கிப் போடுகிறார்களே அந்த பெரிய மனிதர்கள் அதைப் போலவே தாராவியிலும் நடந்து கொண்டால் என்ன! தாராவியிலே பெரிய மனிதர்களாக இருப்பவர்கள், மாதுங்கா மண்ணை மிதித்தவுடன் மட்டும் சின்ன மனிதர்களாக மாறிவிடுவது ஏன்! அப்படி இடத்திற்கு தக்கவாறு தங்களை உயர்த்தியும் தாழ்த்தியும் பாவித்துக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன!

இந்த மகா பெரியவர்கள் செய்யும் இந்த மகத்தான காரியத்தால் அவர்கள் மட்டும் இழிவு முத்திரையை வாங்கிக் கொள்வதோடல்லாமல், தாராவி முழுவதிற்குமே வாங்கிக் கொடுத்து விடுகிறோம் என்பதை மறந்து நடக்கும் இந்த பிரகஸ்பதிகள் என்றுதான் உண்மையை உணரப் போகிறார்களோ!

அடுத்த வாரம் மாதுங்காவில் நாடக விழா நடைபெறவிருக்கிறது. எத்தனைத் தாராவிக் கலைஞர்களும் தலைவர்களும் நாற்காலிகள் தூக்கிப் போடுவதற்காக தயாராக உள்ளனர் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்! —'சுதா'

"தினமணியின்" தகிடுதத்தம்!

கோவில்பட்டி தி. மு. கழக செயலாளரின் சாட்டை

"தி. மு. க. வில் பெரும் சரிவு" எனும் தலைப்பிட்டு 10-4-55 தினமணி (மதுரை) இதழில் வெளிவந்த செய்தி உண்மைக்கு மாறாக முன்கூட்டியே திட்டமிடப்பட்டு, பொதுமக்களுக்கு புலத்த பீதியை ஏற்படுத்த வேண்டுமென்றே வெளியிடப்பட்டதை பலமாகக் கண்டிக்கிறோம். ஓய்ந்து போனவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், இருந்தஇடம் தெரியாமல் கிடந்தவர்கள், ஆகிய யார் யாரோ பேசியவற்றை ஆதாரமாக வைத்து தி. மு. க. வில் பெரும் சரிவு எனும் வேண்டாத தலைப்பை வெளியிட்ட தினமணியின் வக்ரபுத்தி உண்மை நிலை தெரிந்த பலராலும் கண்டிக்கப்படுகிறது.

கோவில்பட்டி பஞ்சாயத்து போர்டு தலைவர் தோழர் வள்ளிமுத்து அவர்கள் தி. மு. க. விலிருந்து விலகி காங்கிரசில் சேர்ந்தார் என்ற செய்தியை பிரமாதமான விஷயதானமிட்டு வெளியிடும் தினமணி, 29-11-51-ல் திருநெல்வேலியில் கூடிய நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் தோழர் வள்ளிமுத்து அவர்கள் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை வெளியிட மறந்தோ மறுத்தோ விட்டுவிட்டது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய செய்தி 1—12—51-ல் வெளிவந்த தமிழ்நாடு நாளிதழிலும் ஏனைய பத்திரிகைகளிலும் வெளிவந்திருப்பதை பொதுமக்கள் மறந்துவிட்டிருக்கமாட்டார்கள்.

1952-ம் வருடத்தில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் கணக்குப்படி கோவில்பட்டி நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகார பூர்வமான உறுப்பினர்கள் தொகை 75 தான். இந்த 75 பேரும் எந்தவிதமான மாற்றமுமின்றி இன்னும் தி. மு. கழகத்திலேயே இருக்கிறார்கள். நிலைமை இப்படியிருக்க தி. மு. கழகத்தை சேர்ந்த மற்றும் 200 பேர் விலகி கோவில்பட்டியில் காங்கிரசில் சேர்ந்தனர் என்ற உண்மைக்குத் திரையிடும் செய்தியை வெளியிடுவது நேர்மையாகுமா? இன்னும் சொல்லப்போனால் இந்த75பேரில் தோழர் வள்ளிமுத்து அவர்களின் பெயரே கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே புதிதாக 'ஞானஸ்நானம்' பெற்று காங்கிரசில் சேர்ந்திருப்பவர்களோ அல்லது தினமணியோ கோவில்பட்டியில் தி. மு. க. விலிருந்து யாரேனும் ஒருவராவது விலகிக் காங்கிரசில் சேர்ந்தனர்என்பதை ருசுப்படுத்த முடியுமா என்று அறைகூவல் விடுக்கிறோம். இனியாவது தினமணி இவ்வித தகிடுதத்தச் செயல்களில் இறங்க வேண்டாமென்று எச்சரிக்கிறோம்.

மீர்சாகிப்பேட்டை அழகிரி நாடக மன்றம்
அளிக்கும் முதல் விருந்து!
அத்தான்
இடம்? தேதி? எதிர்பாருங்கள்.

செய்திகள்

பம்பாய்

'முயற்சி' 3-வது நிறைவு விழா

10—4—55 மாலை 6—30 மணியள வில் பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திங்களிதழான முயற்சியின் மூன்றாமாண்டுவிழா முன்னாள் முயற்சி ஆசிரியர் தோழர் நாஞ்சில் இராசாமணி தலைமையில் நடைபெற்றது. தோழர் க. தங்கவேலன் முயற்சி ஆண்டு மலரை திறந்துவைத்து சொற்பொழிவாற்றி னர். பின்னர் தோழர்களான பட்டுக் கோட்டை தனக்கோடி, முன்னாள் முயற்சி ஆசிரியர் த. மு. பொற்கோ, க. வள்ளிநாயகம் ஆகியோர் சொற் பொழிவாற்றினர். இறுதியாக வட லூர் வேலுவில் நன்றி நவில ஆண்டுவிழா வின் நிகழ்ச்சிகள் இனிது முடிந்தன.

ப. தி. மு. கழகத் துணைத் தேர்தல்

10-4-55 மாலை 9—30 மணிக்கு ப. தி. மு. கழகத் துணைத் தேர்தல் கழகச் செயலாளர் தோழர் ஆரியசங்காரன் அவர்களைத் தேர்தல் அதிகாரியாகக் கொண்டு நடைபெற்றது. தோழர் கே. எ. சற்குணம் பொருளாளராகவும், தோழர் எல். செல்லைச் செழியன் செயற் குழு உறுப்பினராகவும் குறிப்பிட்ட நாளில் மனுச் சமர்ப்பித்தமையாலும், வேறெந்த தோழரும் போட்டியிட வில்லையாதலாலும் தேர்ந்தெடுக்கப்பட் டனர். இறுதியாக சா. தர்மராசன் (ப. தி. மு. க. துணைச்செயலாளர்) நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

தாஞ் கிளை தி. மு. க.

8-4-55 அன்று மாலை 6—30 மணிக்கு செயலாளர் வைதீக சங்காரன் தலைமை யில் நடந்த செயற்குழு, கீழ்கண்ட தீர் மானங்களை நிறைவேற்றியது.

வரவு செலவுகணக்கு சரிபார்த்து ஒப் புக்கொள்ளப்பட்டது.

சொற்பயிற்சி தொடர்ந்து நடைபெற தோழர் இரா. நம்பிநாரூடணன்அவர் களை சொற்பயிற்சி பொறுப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆண்டு விழாவை பம்பாய் தி. மு. க. தோழர்களைவைத்து நடத்துவது.

*

1—4—55 அன்று மாலை 5—மணிக்கு பம்பாய், தாராவி கல்யாணிவாடி தோழர் டி. முருகேசன் இல்லத்தில் தாலமுத்து நடராசன் படிப்பக உறுப் பினர் கூட்டம் நடைபெற்றது. கூட் டத்தை தோழர் இரா. சண்முகவேலன் துவக்கி வைக்க தோழர் எம். எஸ். கண பதி கூட்டத்திற்கு தலைமை தாங்கினர். தோழர்கள் எஸ். தங்கையா, பி. செண் பகப்பாண்டியன் ஆகியோர் வடநாட் டவரின் மொழி ஆதிக்கம் குறித்து நீண்ட நேரம் பேசிய பின்னர் தோழர் இரா. சண்முகவேலன் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

பம்பாய்—பொய்சேர்

கடந்த 20-3-55 பொய்சேர் தி. மு. கழக பணிமனையில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டது.

22-2-55 செவ்வாய்க் கிழமையன்று (தி. மு. க.) செயல்வீரர் என். எஸ். மாணிக்கம் அவர்களின் வாழ்க்கைத் துணைவி சண்முகவடிவு இயற்கை யெய் தியமைக் குறித்து இக்கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாருடைய கணவனுருக்கும், உறவினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

பம்பாய் திருவள்ளுவர் கலாமன்றம்

உறுப்பினர் கூட்டம் 1—4—55 வெள்ளி காலை 10 மணிக்கு தாராவி குடி அரசு நிலையத்தில் மன்றத் தலைவர் திரு எஸ். மகாராசன் அவர்கள் தலைமை யில் நடைபெற்றது. தோழர் எஸ்.எஸ். சண்முகநாதன் பண்ணிசைக்க கடந்த கால நிகழ்ச்சிகளும் போக்குவரத்து களும் செயலாளர் கே. எம். பிரகாசம் அவர்களால் வாசித்துக் காட்டப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன. 27—3—55 அன்று நடைபெற்ற மன்றத் தேர்தல் கூட்ட முடிவுப்படி புத்தாண்டு நிர்வாகி களாக எ. பி ஏசுதாசன் தலைவராகவும் இரா. வளர்மதி செயலாளராகவும் கே. கே. சீனுவாசன் துணைச்செயலாள ராகவும் எஸ். எம். சின்ராஜு பொருளா ளராகவும் இ. ஜான்வில்லியம், எம். கிட்டு, பெருமாள் ஆகியோர் கட்டண வசூலாளராகவும் பொறுப்பேற்றுள்ள னர். இறுதியாக பலிபீடம் நோக்கி நாடக வெற்றிக்கு ஒத்தாசை புரிந்தோ ருக்கும் நடிகர்கட்கும் பாராட்டுக் கூட் டம் 17—4—55-ல் நடத்துவதென முடிவு செய்தபின் தலைவர் முடிவுரை யுடன் துணைச் செயலாளர் யு. எஸ். செல்லையா நன்றிநவில கூட்டம் இனிது கலைந்தது.

ஆமதாபாத்

10—4—55 மாலை 6 மணிக்கு மறு மலர்ச்சி நாடகமன்ற செயற்குழு மன்ற இல்லத்தில் கூடியது. அதுபோது 'பகுத்தறிவு' ஆசிரியர் ப. கண்ணன் அவர்கள் எழுதிய 'புரட்சிப் பாடகன்' என்னும் நாடகத்தை விரைவில் நடத் துவது. மன்றத்திற்கு சேசையா, புரட்சி மாறன், புதுவை — வைத்தியநாதன் ஆகிய மூன்று பேர்கள் அடங்கிய கதை குழு ஒன்று அமைப்பது. விளம்பர உறுப்பினராக பு. பொ. வை. நியமிப் பது. அடுத்துவரும் மே திங்களில் மே விழாவில் 'வறுமையின் கொடுமை என் னும் நாடகம் நடத்துவது. விழா பொறுப்பாளராக மாறன், வரவேற் பாளராக மன்ற செயலாளர் சி. தேவ ராசு, தலைவராக பெ. இலக்குமணன் அழைப்பது. 27—3—55-ல் மணிநகர் தி. மு. க. கூட்டத்தில் நடந்தேறிய நாடக வரவு செலவை ஒப்புக்கொள்ளப் பட்டது. மே விழாவிற்கு இங்குள்ள ஒவ்வொரு தி. மு. க. கிளைகளின் சார் பாக ஒவ்வொரு பேச்சாளர்களை அழைப் பது.

அம்பேத்கார் 64-ம் ஆண்டு விழா

○

14-4-55 குடியேற்றம் அடுத்த வெங் கடாபுரத்தில் மாலை 3 மணிக்கு தோழர் முருகையன் அவர்கள் தாழ்த்தப்பட்ட சம்மேளனத்தின் கொடியை ஏற்றி வைத்தார். பின்னர் முத்துச்சாமி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு 5 மணிக்கு முடிவடைந்தது. தோழர் சி. எம். கோவிந்தசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பி. சி. ஜெயராமன், அண்ணு மலை, அறிஞர் அம்பேத்காரின் சேவை யைப்பற்றி பேசினர். செயலாளர் ஜி முனுசாமி நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

ஆலத்தம்பாடி

தஞ்சை மாவட்ட ஆலத்தம்பாடி தி. மு. கழக சார்பில் 6-4-55 புதன் மாலை 6 மணிக்கு பஸ் நிலையத்திற்கருகில் தோழர் ஆர். இலக்குமணன் தலைமை யில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் மங்கா நல்லூர் தோழர் எஸ் எம், சுல்தான் தோழர் சி. பி சிற்றரசு ஆகியோர் ஐந்தாண்டு திட்டத்தை கண் டித்தும் திராவிட நாட்டு பிரிவினையை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

கால் ஆணிக்கு மேல்பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்தும் ஆணியைப் போல் ஏற்பட்டு நடக்கும்போது பாத மானது தரையில் வைக்க முடியாமலும் கல் பட்டால் துடி துடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூபா 2—8—0

தபால் சார்ஜ் இனும்

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்

சென்னை - 12.

அமலனது கற்பனைச் சுடரினின்றும் தெறித் துச் சிதறிய மூன்றாவது தீப்பொறி

செஞ்சியின் செல்வன்

(தேசிங்குராஜன் சரிதை நாடக உருவில் செஞ்சி வரலாறு கோட்டை வர்ணனையுடன்)

வண்ண முகப்பு! அழகிய பதிப்பு! விலை ரூ. 2-4-0

இலக்கியப் பூங்கா

கஸ்தூரிபாய் வீதி, பண்ருட்டி, தென்னாற்காடு மாவட்டம்

"திராவிடன்" சந்தா விவரம்

●

உள்நாடு

ஆண்டு சந்தா	...	ரூ. 8 0 0
ஆறுமாதம்	...	ரூ. 4 0 0
தனிப்பிரதி	...	ரூ. 0 3 0

வெளிநாடு

ஆண்டு சந்தா	...	ரூ. 9 0 0
ஆறு மாதம்	..	ரூ. 4 8 0
தனிப்பிரதி	...	ரூ. 0 3 6

ஓரே ஒரு கவிஞன்—தொடர்ச்சி

விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ'! அவ்வளவு விரைவாகக் காதலியின் தேவை களை பூர்த்தி செய்யத் தவிப்பரனும் காத லன். அதற்கு தடைபோட வரும் எதையும் தாங்கிக்கொள்ள—ஏன்?—எதிர்க்கவே துணிந்துவிடுகிறானும்; அதனை எத்தனை அழ காகவும் நயமாகவும் எடுத்துரைக்கிறார், நோக்குக்கள்:

"கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர்கடுகாம்,"

காதல் மூட்டிச் சோகத்தில் ஆழ்த்திவிடு கிறார் காதலனைக் கவிஞர். வானத்து வெண் மதியைக் காதலியாக்கித் தன் விரகவேதனை யை எவ்வளவு எடுத்துரைக்கிறான். ஆகா!

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை
கோல முழுதுங் காட்டிவிட்டால் காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ! வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ! நீதான்
சொக்க வெள்ளிப் பாற்குடமோ! அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!"
"அன்புள்ளம் பூணுகின்றேன், அதுவுமுற்றி
ஆகாயம் அளாவுமொரு காதல் கொண்டேன்!
இன்பமெனும் பால்நுரையே! குளிர் விளக்கே!
எனையிழந்தேன், உன்னெழிலில் கலந்ததாலே!

இப்படி உருகித் தவிக்கிறான் காதலன். கவிஞரின் திறம் வியந்து போற்றற் குரி யது. ஆதிக்கத்தை எதிர்க்கும் போது கனல் கக்குகிறார். ஆத்திகத்தைத் தாக்கும்போது அனலையே மூட்டி விடுகிறார். காதலனை வேதனையில் ஆழ்த்தி விடுகிறார். வீரம், காதல், சோகம் ஆகியவற்றை அப்படியே நம் கண்முன் கொண்டுவரும் நம் புரட்சிக் கவிஞர் பிறந்த நாள் இந்தத் திங்கள் இறுதி வாரம் வருகிறது.

புதுவையிலே பிறந்து புதுமைக் கவி யாகிப் புரட்சிக் கவியாகவே திகழ்கிறார். அவர் இந்நாட்டுக்குத்—திருவிடத்துக்கு—இந்நாட்டு இளைஞர் குழாத்திற்கு ஆற்றிய—ஆற்றி வருகின்ற அருந்தொண்டுக்காக நன்றி செலுத்தும் முகத்தான் அவருடைய பிறந்த நாளை அனைவரும் கொண்டாடிச் சிறப்பிக்க வேண்டும். திராவிடர் அனைவரும்—குறிப்பாகத் தமிழர் எனும் தகுதியுடைய அனைவரும்—அத்திருநாளைக் கொண்டாடி நாம் பெருமையுறுவோம்—பயனுறுவோம்.

—"பூவையான்"

கம்யூனிஸ்ட் கூடாரத்தின் மேல்மாடி கோளாறு?

ஏகாதிபத்ய—தொடர்ச்சி

அதாவது உஜ்ஜயினி மார்க்கத்தில் பிராட்கேஜ லைன் ரெயில்வே மந்திரி லால்பஹதூர் சாஸ்திரி திறந்து வைக்கிறார். ஆனால் நமக்கு 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மானாமதுரை—விருதுநகர்லைனும் (அருப்புக்கோட்டைவழியாக) மேலூர் வழியாக காரைக்குடி ரெயில் பாதையும் இனி போடப்படுமாம்—காமராசர் செப்புகிறார். முதல் ஐந்தாண்டுத் திட்ட 1241 கோடி அபேஸ்.

அடுத்து ஆந்திரா நந்திகொண்டா திட்டம் 110 கோடி, நெய்வேலி 60 கோடி, பெரம்பூர் கோச் பாக்டரிக்கு 9 கோடி என்று சொல்கிறார் முத்தையா. இதைச் சொன்னவர் இது எந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படும், அந்த ஐந்தாண்டுத் திட்டத்துக்கு மொத்தம் எத்தனை கோடி என்று குறிப்பிடக்காணோம். அதைக் குறிப்பிட்டால் குட்டு வெளுத்துவிடும். முதல் ஐந்தாண்டுத் திட்ட தொகைக்கும் 2 வது ஐந்தாண்டுத் திட்டத்துக்கும் முடிச்சுப் போடப்பார்க்கிறார் முத்தையா. 2 வது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் முத்தையாக்கள் குறிப்பிடுவது. 2 வது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு சுமார் 6000 கோடி ரூபாய் மதிப்பு போடுகிறார்கள். நந்திகொண்டா திட்டம் 2-வது திட்டத்தில் நிறைவேற்றப்பட நெய்வேலியும் அப்படியே. ஆனால் வடக்கே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு திட்டத்துக்கும் முதல் கட்டத்துக்கே நூறு கோடிக் கணக்கில் நிறைவேற்றுகின்றனர். பக்ரா நங்கல், ஹிராகுட், தாமோதர் (முதற் கட்டம்) கோசி, (முதற் கட்டம்) ரீஹண்டு சாம்பல் (முதற் கட்டம்) கொயனு முதலிய திட்டங்களுக்கு 493 கோடி வரை மத்திய சர்க்காரே பூரா தொகையையும் போட்டு செலவழிக்கிறது. ஆனால் தென்னாட்டில் மத்திய மாநிலஅரசு கூட்டாக சேர்த்து நிறைவேற்றும் திட்டம் 70கோடிதான். இதை சென்னை நிதிமந்திரி சுப்பிரமண்யமே உணர்ந்துகோவையில், தென்னாடு புறககணிக்கப்படுவதை கண்டித்தார். அவரைவிட நிதி இலாகாவில் இருந்த அதிமேதாவியல்ல இந்த முத்தையாக்கள், அன்று ஓமந்தூரார் உணர்ந்தார், ஆச்சாரியார் சொன்னார். ஆந்திர அமைச்சர் கோபாலரெட்டி சொன்னார். இன்று கேரளத்து அன்னுமஸ்கரீன், தமிழ்நாடு காங்கிரஸ் பி.நடேசன், மைசூர் அமைச்சர் அனுமந்தய்யா இவர்கள் எடுத்துக்காட்டுகளை யெல்லாம் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல் மறைக்கப் பார்க்கிறது ஜனசக்தி.

5. இதை எடுத்துச் சொன்னால்காங்கிரசுக்கும் தி. மு. க. வுக்கும் வித்தியாசமில்லை என்றும் தன் கட்சிதான் முற்போக்கு கட்சி என்றும் டம்பமடிக்கப் பார்க்கிறது. உள்நாட்டுப் பிரச்னையில் நாங்கள் சொல்வதை காங்கிரசாரும் ஒப்புக்கொண்டு விடுகின்றனர் என்று கம்யூனிஸ்டுகளிடம் சுட்டிக் காட்டும்போது கசக்கிறது; முகத்தைச் சுளிக்கிறார்கள். ஆனால் இதே கம்யூனிஸ்டுகளின் சமாதான இயக்க கொள்கையை சுண்ணும்பு என்றும் நேரு சர்க்கார் சமாதானக் கொள்கைதான் வெண்ணை என்று நிதியமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார். உடனே ஜனசக்தியிலே "சமாதான இயக்கத்தை காந்தி சீடர் குமரப்பா சுந்தர்லால், டாக்டர் ராதாகிருஷ்ணன், ஜாலியன்வாலாபாக் வீரர் கிச்சுலு, செட்டி நாட்டு வேலாயுதஞ் செட்டியார் இவர்களெல்லாம் தேசியத்தார்தானே'—என்று எழுதினார்கள். வெளிநாட்டுப்பிரச்னைக்கு காங்கிரசாரை ஆதாரம் தேடிய புத்தி, உள்நாட்டுப் பிரச்னையில் காங்கிரசார் கூற்றின் ஆதாரத்தைச் சொல்லும்போது ஒடி ஒளிந்து கொள்கின்றது போலும்!

6. அடுத்து கே.எம்.வலைகிறார்—'தென்னாட்டில் இந்தவிதத் தொழில்களை ஏற்படுத்தும் வாய்ப்புகள் உள்ளன. அவைகளை ஏற்படுத்த வேண்டுமென்றுகிளர்ச்சி செய்தால் அர்த்தமுண்டு'—என்று நமக்கு உபதேசம் செய்ய வருகிறார். இதற்கு முந்திய 13–3–55 ஜனசக்திஇதழில் 'பரீட்சார்த்த திட்டமாகிலும் ஏற்படுத்த நாம் கோரவேண்டும்.' என்று இதே முத்தையாக்கள் குறிப்பிட்டிருந்தனர். இந்த இதழில் அந்த 'உம்' ஐ எடுத்துவிட்டார். 'உம்' எதைக் குறிக்கிறது! தானிக்குப் பேர் ஏமி' என்று திராவிட நாடு இதழில் கேள்விக்கணை தொடுத்து விளக்கியவுடன் இந்த இதழில் அதைக் காணோம். விலைவாசிப் பிரச்னையையும் காணோம்.

என்ன முத்தையாக்களே தி. மு. க. தான் எதை எடுத்தாலும் வடநாடு தென்னாடு என்று பிரித்துப் பேசுவதாக போலிக் குற்றம்சாட்டினீர். இப்போது நீரே 'தென்னாட்டில்' என்று ஆரம்பிக்கிறீரே! வந்துதானே தீரும். "தென்னாட்டில் இந்த வசதிகள்..." என்று குறிப்பிட்ட நீர், கிளர்ச்சி செய்யவேண்டுமென்றுதான் மொட்டையாகக் குறிப்பிடுகிறீரேயன்றி யாரிடம் கிளர்ச்சி! தென்னாடு என்பதற்கு எதிர்ப்பதம் வடநாடு. தென்னாட்டில் ஏற்படுத்த வடநாட்டாரிடம் கிளர்ச்சி. டில்லியிடம் தானே கிளர்ச்சி செய்ய வேண்டும். அல்லது அமெரிக்கா பிரிட்டனிடம் கிளர்ச்சி செய்ய வேண்டுமா! கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தால், செய்தால் பின் அந்தப் பிரச்னை ஏன் மறுக்கப்படுகிறது என்று விடை தானாக வந்துவிடும். பிறகு வடநாடு தென்னாடு பிரச்னையும் கூடவே வந்துவிடும். தி. மு. க. முன் கூட்டியே சொல்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி கூலிப் பிரச்னையைத்தானே கண்டிக்கிறது. அல்லது பார்மோசா டல்லஸ்பற்றி தெரிந்திருக்கும். எதிர்த்திருப்பர். டில்லியின் போக்கிடம் போராடவில்லையல்லவா! ஆமாம் இங்கு மட்டும் கிளர்ச்சி செய்து திட்டங்கள் நிறைவேற்றச் செய்ய வேண்டியிருக்கிறதே வடநாட்டில் கிளர்ச்சி யில்லாமலே திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றனவே அது ஏன்! அங்கு ஹிராகுட்டிலே கான்ட்ராக்ட் எடுத்ததில் இவ்வளவு லஞ்ச ஊழல் என்ற கிளர்ச்சி கண்டனம் என்றுதானே அடிபடுகிறது! இங்கு திட்டமே நிறைவேற்ற முன்வரவில்லையே பின் எங்கு தொழிலாளர் ஆதரவோடு லஞ்ச ஒழிப்பில் ஈடுபடுவது. கல்யாணமே நமக்கு செய்து வைக்கப்படவில்லை. பின் எப்படி குழந்தை வளர்ப்பைப் பற்றி பேசமுடியும்!

7. தென்னாட்டில் திட்டங்களை நிறைவேற்றச் சொன்னாலும் போலிக்காரணங்களைக் காட்டி வசதிப்படாது என்று மறுத்துவிடுகிறார்கள். இதை கம்யூனிஸ்ட் கட்சியே மறுக்க முடியாதபடி ஜனசக்தியின் தலையங்கம் ஆதாரமாக நிற்கிறது, அதாவது 13—3—55 ஜனசக்தியில் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி விமர்சிக்கும்போது குறிப்பிட்டது இப்படி—'இரும்பும் நிலக்கரியும் தோண்டி எடுக்கப்படும் இடத்தில்தான் இரும்பு தொழிற்சாலை நிறுவ முடியும் அவ்வசதிகள் பிலாய், ரூர்கேலாவில் உள்ளன. அந்தக் காரணத்தாலே அங்கு தான் ஏற்படுத்த முடியும்' என்று சேலத்தில் இரும்புச்சாலையை புறக்கணித்து ஜனசக்தி காரணம் காட்டிற்று.

ஆனால் இதே ஜனசக்தியின் 3-4-55 தலையங்கத்தில் சேலம் இரும்புத் தொழிற்சாலையைப்பற்றி இந்தியபூகம்ப ஆராய்ச்சியாளர்களின் ரிப்போர்ட் முற்றிலும் தவறான வாதம். எஸ். வி. ராமசாமி எம். பி. க்கு ஜெர்மன் நிபுணர் எழுதிய விளக்கம் சேலத்தில் இரும்பு சாலை அமைக்க முடியும் என்று காட்டுகிறது.' என்ற கருத்தில் குறிப்பிட்டுள்ளது. இது முற்றிலும் தவறான வாதம் என்பது இந்த இதழிலே, 21 நாளுக்கு முந்திய அதே ஜனசக்தியில் மத்திய பாரத்தில்தான் அமைக்கமுடியும் என்ற விளக்கம். என்ன முன்னுக்குப்பின் முரணான அவசர முடிவு என்பதைப் பாருங்கள் ஆக முதலில் தவறு தவறு என்று இந்த முத்தையா தன் தலையில் தானே கொட்டுபோட்டு பத்துதரம் தப்புதப்பு என்று சொல்லி மரமண்டையில் பதிய வைத்துக் கொள்ளட்டும். இதேமாதிரித்தான் குன்னூர் தேசிய உணவு ஆராய்ச்சிக் கழகத்தைப் போலிக் காரணம்காட்டி மாற்றிவிட்டனர் வடக்கே. இதை கண்டித்து திராவிட கட்சி மெம்பர்களுடன் சி ஆர். நரசிம்மன் (சி ஆர். மகன்) கக்கன் (தற்போதய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்) முதலியோர் டில்லியில் மனு கொடுத்தனர். ஆனாலும் மறுக்கப்பட்டது. பெங்களூர் பால் பண்ணை ஆராய்ச்சிக் கழகத்தையும் மாற்ற டில்லி முயல்கிறது. மைசூர் உறுப்பினர்கள் கூடாதென்று தடுத்துக் கொண்டிருக்கின்றனர். கடலூர் பனைவெல்ல ஆராய்ச்சிக் கழகத்தையும் மாற்றுகின்றனர் வடக்கே; இப்படியாக சுதந்திரம்வந்தபின் புதிதாகவும் அங்கே கட்டுகிறார்கள், திறக்கிறார்கள். ஏற்கனவே தென்னாட்டில் உள்ளவற்றையும் வடக்கே மாற்றிக்கொள்கின்றனர்.

8. கம்யூனிஸ்ட்கட்சி இவை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சிருஷ்டி என்று சொல்லி மறைக்கப் பார்க்கிறது. 1947-க்குப் பின்னர்தான் பம்பாயில் டாட்டா ஸ்தாபனத்தின் அணு ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. பிலானி [ராஜஸ்தான்]யில் இந்திய சர்க்கார் மின் அணு ஆராய்ச்சி சாலை துவக்கி யுள்ளனர், ஹௌறாலா [கல்கத்தா]வில் கப்பல் கட்டும் எஞ்சினியரிங் காலேஜு நேரு திறந்து வைத்தார், 50 லட்சம் செலவில் ரேடியோ ஐசோடோப்பு ஆராய்ச்சி சாலையை கல்கத்தாவில் நிறுவப்போகின்றனர். சென்ற மாதம் கூட டெல்லியில் இந்திய & கிழக்கத்திய நியூஸ் பேப்பர் சொசைட்டிக்கு நேரு அஸ்திவாரக்கல் நாட்டி யுள்ளார். பிரிட்டிஷாரோடு ட்ராம்பேயில் எண்ணை சுத்திகரிப்பு நிலையம் கூட்டாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. அலஸ்சா [பீகார்]வில் வெள்ளையருடன் சேர்ந்து பிக்கில்டன் கிளாஸ் ஒர்க்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டத்தில் அணைக்கட்டுகள் உருக்குத் தொழிற்சாலைகள் அங்கே தான். இங்கே நாம் கைத்தறி நெசவாளர் அவதிப்பட பிச்சை யெடுக்கிறோம். அவர்களுக்கெல்லாம் மில் ஏற்படுத்தி வடநாடு செல்லும் நூலை நெய்யச் செய்தால் வேலையில்லாத் திண்டாட்டம் போகும், லாபமும் கிடைக்கும் நமது தேவையை நாமே செய்து பூர்த்தி செய்து கொள்ளலாம். அதற்கு வேண்டிய மின்சார திட்டங்களை டில்லி கவனிக்கவில்லை. இதை தமிழ் நாடு காங்கிரஸ் பி. நடேசன் அவர்கள் "சென்னை சர்க்கார் 1951-ல் குண்டா திட்டமனுப்பியும் நான்கு வருடங்களாகியும் பதிலில்லை என்று கண்டித்துள்ளார். இருக்கும் திட்டங்களையும் நிறைவேற்ற செய்கிறார்களில்லை. கேட்டால் வைகையாற்றிலே மணல்தான் ஓடுகிறது. அதில் அணைகட்டவா என்கின்றனர். இங்குதான் நிறைவேற்ற திட்டங்கள் இல்லையே! பின் ஏன் டில்லிக்கு வரியனுப்ப வேண்டும்! அதை வைத்து சும்மாகூட உட்கார்ந்து சாப்பிடலாமே பலர்!

9. தென்னாட்டுக்கு திட்டங்கள் செய்ய டில்லியில் தென்னாட்டு உறுப்பினர்கள் முழங்கும் போது வடநாட்டு கம்யூனிஸ்டுகள் 'கம்' என்றிருக்கிறார்கள். வடநாட்டு அகில இந்தியக் கட்சியினருக்கு தலைமையை யார் கைப்பற்றுவது என்பதிலேதான் வேறுபாடே தவிர தெற்கைப் புறக்கணிப்பதிலே எல்லாம் ஒத்து இருக்கிறார்கள். சம்பத் குறிப்பிட்டதுபோல், நம்மிடமிருந்து பறிபோன நெல்லசை வடவர் தமக்குள் எப்படி பங்கு போட்டுக் கொள்வதென்பதிலேதான் அபிப்ராய பேதம். நமக்கு திருப்பித் தந்துவிட வேண்டுமென்று அவர்கள் எண்ணவில்லை. அந்த வகையிலே அவர்களிடம் இன உணர்ச்சி கட்சி வேறுபாடின்றி குடி கொண்டிருக்கிறது. இளிச்சவாயர்கள் நாம்தான் இந்தி மொழிப் பிரச்சனையிலேயே வடநாட்டு கட்சிகள் ஒரே கருத்துக் கொள்வதிலிருந்து அவர்களின் ஏகாதிபத்தியப் போக்கை உணரலாம். இதை நாம் எடுத்துச் சொன்னால் வடநாட்டு வெறி என்கின்றனர்.

'இது தி. மு. க.வின் இனவெறியிலிருந்து எழும் துவேஷம் என்று கூறுவதில் தவறென்ன' என்று கூறி ஜனசக்தி முடிக்கிறது. எது துவேஷம் என்று இதுகாறும் ஓரளவு விளக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் தவறென்ன என்று கேட்கிறது ஜனசக்தி. தவறென்ன என்பதை நாங்களே சொல்லி யுள்ளோம். இனி கம்யூனிஸ்டு கட்சியே 'ஏன் தவறியது என்று அறிக்கை விடாமலா போகும்! ஜனக்கு எப்படி தப்பாகி விட்டது யென்று விளக்கம் தராமலா போய்விடும்! தவறிவிட்டு புத்தி, புத்தி என்று கன்னத்தில் அடித்துக்கொள்வது கம்யூனிஸ்டு கட்சியினருக்கு ஏற்பட்ட வழக்கமான அம்சம்தானே!

—சே. சி. இரா. மதுரை

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதறாஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதறாஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோவில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஒட்டல், மதுரை
" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

கைத்தறித் துணியையே ஆதரியுங்கள்.

'எடுத்துக் காட்டு!'

★

திண்டுக்கல் பாண்டியனார் நாடக மன்றத்தார் நாட்டு மக்களுக்களித்த நல்லதொரு கருத்து விருந்து. வழக்கமாக நாடகங்களிலே வந்து போகும் 'காதல் துரோக'மோ, காதற் கொலையோ, காதல் வில்லன்களோ இல்லாமல் கதையை சிருஷ்டித்திருப்பது ஆசிரியர் சாமி அவர்களின் புதுமுயற்சி.

பூக்காட்டிலே புள்ளிமான் துள்ளிவிளையாடுவதுபோல நாடகம் முழுவதும் அழகு வசனங்கள் தேன் மழை பெய்தது. காதல் கானம் இதயத்தைக் குளிரவைத்தது. 'காட்டுக் கெடுத்துக் காட்டு' என்ற சோக இசை நாட்டுக்குடையவனின் உள்ளக் கண்ணாடியாகியது.

* நடிப்போ 'அபாரம்—அற்புதம்' என்ற புகழ் பட்டயத்தைத் தட்டிக் கொண்டு...எதிர்கால கலையுலகின் படிக்கட்டிலே அந்த லட்சிய நடிகர்களை நிறுத்தி வைத்தது. கதாநாயகியாக நடித்த தோழியரைத் தவிர மற்ற எல்லோருமே பண்பட்ட நடிகரைப்போல நடித்து பார்ப்போரை பரவச மாளிகைக்கு அனுப்பத் தவறவில்லை!

கதாநாயகனாக நடித்த அருள் தேவசகாயம்; சர்க்கார் வக்கிலாக நடித்த சமதர்மம்; வில்லனாக நடித்த கவி மகிமைராசன்; குமரன் குருசாமி; கனகம் எல்லோருமே மிக கச்சிதமாக நடித்தனர், அந்த அற்புத நடிப்பைக்காண ஆயிரமாயிரமாகத் திரண்ட மக்களும் குறிப்பாக தோழியர்களும் இதயத்தால் பூரித்து வாய்குளிர வாழ்த்தாமலில்லை. சினிமா ரசிகர் சங்கமும் ஒரு அன்பு மடல் தந்து வாழ்த்தியது.

இடையகோட்டையில் கலைவிழா

30, 1, 2 ஆகிய மூன்று நாட்களிலும் தி. மு. க. சார்பாக 'சம்பத் படிப்பக' நிதிக்காக இடையகோட்டையில் திண்டுக்கல் பாண்டியனார் நாடக மன்றத்தார் கலைவிருந்தளித்தனர்

அரசியலில் மட்டுமல்ல கலை உலகிலும் நாங்கள் போட்டியாளர்கள்தான் என்பதை தெளிவாக்குவதற்கோ என்னவோ...தேசிய நாடக மன்றத்தார் அழகிரி அரங்குக்குப் பக்கத்தில் ஆற்று மணலில் திறந்தவெளியில் நாடகமாடினர். தேசியத்தார் தேசத்துரோகியாக நடித்தனர்...திராவிடக் குயில்கள் அழகிரி அரங்கிலே பண்பாடிய நேரத்திலே!

கலைத் தோட்டத்திலே பூத்துவிட்ட இந்த கள்ளி மலர்கள் முகத்திலே கரியைத்தான் பூசிக்கொண்டனர். மூன்று நாள் நாடகத்துக்கும் பொது மக்கள் திரண்டெழுந்து ஆதரவு தந்தனர்.

முதல்நாள் கலைஞர் கருணாநிதியின் 'சாந்தா' நாடகமும், 2-ம் நாள் எம். என். சாமியின் 'எடுத்துக் காட்டு'ம் 3-ம்நாள் மு. க. வின் சாந்தா & மா- தங்கவேலர் தீட்டிய 'பத்மினி' நாடகமும் சிறப்பாக நடந்து முடிந்தது. புன்னகை பூத்த முகத்தோடு பூமாலை தாங்கிய இதயத்தோடு இலட்சிய நடிகர்களுக்கும் நாடக சிற்பிகளுக்கும்...வாழ்த்தளித்தனர் சம்பத் படிப்பகத்தார்,

அந்த அளவோடு கலை விழாவும் முடிந்தது. தேசியத்தாரின் புதிய நிலையும் விளக்கி வைக்கப்பட்டது.

கலையிலே கட்சிப் பிரச்னையைக் கலக்கி விட்டோமென்று கர்ஜனை புரியும் கதர்க் குல்லாயினர் 'இடைய கோட்டை' நிகழ்ச்சிக்கு என்ன சமாதானம்தான் கூறப்போகிறார்களோ!

நாடகம் நடத்த முன் அனுமதி பெற்றவர்கள் சம்பத் படிப்பகத்தார். நிலைமை அப்படி யிருக்க குதர்க்க நினைவோடு போட்டிச் சூழ்நிலையை வளர்த்த தேசியத் திருவாளர்கள் பகுத்தறிவாளரின் கண்டிப்புக்கு—நம்மவரின் பரிகாசத்திற்கு ஆளானவர்களேதான்.

இதுமாதிரி கள்ளி மலர்களிருப்பதால்தானே கனகாம்பரத்தின் மதிப்பு அதிகமாகிறது. மேகத்தின் தாக்குதலால்தானே நிலவுக்கு சில நேரங்களிலே தங்கமுலாம் பூசப்பட்டதாகிவிடுகிறது. தேசியத்தாரின் கலைமோதுதல்கூட நம்மை கவர்ச்சி யுள்ளவர்களாகத்தான் ஆக்கிவிடுகிறது! வளர்க அவர்களது கலைப்போர்...வாழ்க போட்டி தேசீயம்!

—"திண்டுக்கல்லார்"

கலை அரங்கம்

கலையுலகில் அவாளும்-நம்மவர்களும்!

★

"அடுத்த தெருவில் கலியாணமாம். அதற்கு இங்கே ஓட்டமாம்!" என்று அனாவசியமாக பிறர் காரியங்களில் தன்னை நுழைத்து, அதை நானே நடத்துகிறேன் என்று வீண் தப்பட்டை அடித்துக் கொண்டு திரியும் சிலரைப் பார்த்து, முதியவர்கள் கிண்டல் பண்ணுவதைக் கண்ணால் கண்டு, காதால் கேட்டு ரசித்திருக்கிறேன்,

அந்த பழமொழிதான் ஞாபகம் வருகிறது, ஒரு சில தாராவித் தனிப்பெரும் தலைவர்கள்—கலைஞர்கள் குழாமைக் கண்ணால் காணும்போது!

மாதுங்காவிலே நாடக விழாக்கள் நடைபெறுவதுண்டு. அந்நிகழ்ச்சிகளுக்கு, பிரபல கலைஞர்கள் சென்னையிலிருந்து ஏற்றுமதியாகி, பம்பாயில் இறக்குமதியாகி, மாதுங்காவிலே விற்பனையாவதைப் போல நிகழ்ச்சிகள் இருக்கும். விழாவில் ஈடுபடுகின்றவர்களோ, பெரும் பெரும் கனதனவான்கள், பட்டதாரிகள், பங்களாவாசிகள்!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கூறிக் கொண்டு திரிந்தாலும், 'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை சாதியில்' என்ற கீதம் இசைத்தாலும் 'அவாள்' எந்த இடத்திலாவது யாவரும் சமம் என நடந்து கொண்டதுண்டா! அதுவும் பிரபல விழாக்களிலே, பெரிய மனிதர்கள் மத்தியிலே 'அவாள்' கடைசி உறுப்பினராக இருப்பினும் இந்த 'எடுபிடி' வேலைகள் செய்வார்களா? இதற்கு முன்னர்தான் செய்திருக்கின்றனரா!

தாராவி என்றால், கழகத்தின் தலைவர் முதல் அனைவரும் நோட்டீஸ் ஒட்டுவதற்காக, ஏணியையும் பசையையும் கையிலே தூக்கியவண்ணம், இரவு, 12 மணிக்குமேல் நகர் சுற்றுவர். ஆனால் 'அவாள்' விழாக்களிலோ, கூலிக்காக நோட்டீஸ் ஒட்டுபவனிடம் கூட தனது சங்க கடைசி ஆட்கள் மூலம்தான் பேரம் பண்ணுகின்றனர்! 'அவாள்' அப்படி! 'இவாள்' இப்படி!

தாராவி என்றாலே, மற்ற பகுதி மக்கள் அங்கு வாழும் மக்களை கேவலமாக கீழ்த்தரமாக அலட்சியமாக மதிக்கின்றனர். ஏனெனில் தொழிலாளர்கள் வாழும் இந்த தாராவி ஓர் சுகாதாரமற்ற இடம். அதனால்தான் அங்கு வசிப்போரை காட்டுமிராண்டிகளென நினைத்து, பம்பாய் நகரசபை கூட "மனிதர்களாக" பாவிக்கவில்லையென்ற குமுறல் வளர்ந்து வருகிறது!

ஆனாலும் தாராவியிலே பல துறைகளிலே கழகங்கள் தோன்றி பிறபகுதி கழகங்களுடன் தொடர்பு கொண்டு அதனால் கிடைக்கப்பட்ட சில நண்பர்களாவது தாராவியிலும் சில 'மனிதர்கள்' இருக்கிறார்கள் என்று சிறிதளவாவது நினைக்க வைத்தது!

அந்த நல்லெண்ணத்தைக்கூட கெடுக்கத் தலைப்பட்டனர், தங்களை இருபதாம் நூற்றாண்டு சாக்ரடீஸ்கள்—இங்கர்சால்கள்—சன்யாட்சென்கள் என்று நினைத்து தலைவிரிகோலமாய் ஆட்டம்போடும் சில பிரகஸ்பதிகள்!

தி.மு.க. தோழர்களை நடுத்தெருவிலே நின்று கொண்டு மட்டரகமாக பேசியும் 'அண்ணாதுரைக்கு வால் பிடிக்கிறான், அவர்கள் உட்கார நாற்காலிகள் தூக்கிப் போடுவதற்காகத்தான் கழகம் அமைத்திருக்கிறார்கள்.' என்று கேவலமான முறையில் ஏசியும் நடுத்தெருவில் நின்று வாய்ச் சவடால் அடித்துக்கொண்டும் பக்கவாத்தியங்களோடு தங்கிணத்தோம் போட்ட மகாபெரிய தலைவர்கள்தான் மேலே தீட்டிய 'குட்டிச்சாத்தான்' பட்டத்திற்கு உரியவர்கள் என்று எண்ணும்போது சிரிப்புமட்டும் தானா வரும்......!

எந்த ஒரு குற்றச்சாட்டை தி. மு. க. தோழர்கள் மீது சாற்றுகிறார்களோ அதையே அவர்கள் அவர்களை அறியாமலே செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதுதான் வேடிக்கை!

தி. மு. க. தோழர்கள் கொடி பிடிக்கவும் நாற்காலி தூக்கவும்தான் இருக்கிறார்கள் என்று அந்த மகாகனம்கள் கூறிக்கொண்டே மாதுங்காவிலே, 'அவாளுக்கு' நாற்காலிகள் தூக்கிப்போடுகிற காட்சி இருக்கிறதே, அதுதான் கண்றாவிக் காட்சி! ஏன் சுவையான காட்சியுங் கூட!

நாடகம் பார்க்கிறதற்காக, 'டிக்கட்' இல்லாமல் 'பொக்கட்டில்' நாடகம் பார்க்க சான்ஸ் கிடைக்கிறது என்றவுடன், (பொக்கட் என்றால் இலவசம் என்று அர்த்தம்) தி. மு. க. தோழர்களை திட்டிய பொன்மொழிகளையெல்லாம் மூட்டைகட்டி ஜிப்பா பையில் வைத்துக்கொண்டு, மாதுங்காவை நோக்கி ஓட்டம் ஓட்டமாக ஓடுகிறார்கள்! நாடகம் பார்க்கத்தான் என்று நீங்கள் எண்ணுவீர்கள்! ஆமாம்! ஆனால் முதலில் இவர்கள்தான் நாற்காலிகள் தூக்கிப் போடுவது முதல் எடுபிடி வேலைகள் அத்தனையும் செய்ய வேண்டும்!

விழா அரங்கத்திலே மேடைமுதல் கடைசிவரை ஆங்காங்கே காவலுக்கும், எடுபிடி வேலைகளுக்கும் நாற்காலிகளைத் தூக்கிப் போடுவதற்கும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஆட்களைப்பார்த்தால் தாராவி மயமாகத்தான் இருக்கும்.

அவர்கள் ஏனோ தானோ ஆசாமிகள் என்றால் பரவாயில்லை. தாராவியிலே பிரபலமானவர்கள், கலைமன்றங்களின் முக்கியஸ்தர்கள், கலைஞர்கள், நடிக சிகாமணிகள்; தாராவி வீதியிலே கம்பீர நடை நடந்து பிறர் செலுத்தும் வணக்கங்களை நாடக பாணியிலே 'ஸ்டைலாக' ஏற்று பிறர் மதிக்க 'டிப் டாப்" நடைபோடும் சகல கலா வல்லவர்கள் மாதுங்காவிற்கு ஓடி, அவாள் காலால் இடும் வேலையை சிரம்மேல் தாங்கி, நாற்காலிகளை தூக்கிப்போட்டு ஓடி ஆடுகிற காட்சியே ஒரு நாடகமாக இருக்கும்!

இங்குள்ள பெரியவாள் அவாளுக்கு நாற்காலித் தூக்கிப் போடுகிற அளவுதான் மதிப்புள்ளவர்கள் என்றால் பிற ஏனோதானோக்களின் மதிப்பு என்ன! அவாள் தாராவியைப்பற்றி என்ன எண்ணுவர்! பிறர்தான் என்ன எண்ணுவர்!

நாற்காலிகள் தூக்கிப் போடுவதை நான் இழிவாக எழுதவில்லை. நமது விழாக்களிலே நாம் பங்கு கொள்ளும் விழாக்களிலே எந்த ஒரு வேலையையும் நாமே புறக்கணித்தால் வேறு யார் செய்வர்! இங்கு அதுவல்ல பிரச்னை. தாராவியில் தான் உட்கார தானே நாற்காலியைத் தூக்கிப் போட்டுக் கொள்ள வெட்கப்படும் இந்த 'சேர் தூக்கி' பிரகஸ்பதிகள் மாதுங்காவிலே போய் நாற்காலிகள் தூக்கிப்போடுகின்றன—அதுவும் பார்வையாளர்களுக்கும் என்றால் என்ன அர்த்தம்!

யாருக்கு யார் வால் பிடிக்கிறார்கள், யாருக்கு

11-ம் பக்கம் பார்க்க

திராவிடன் மேதின மலர்

●

- அரசியல் சம்பவங்களை எடுத்துக் காட்டும் சிறப்புக் கட்டுரைகள்.
- பாட்டாளி மக்கள் எழுச்சி பெற்ற வரலாற்றினை விளக்கும் எழுத்தோவியங்கள்.
- அழகிய முகப்பு—படங்கள்.
- தி. மு. கழகத்தின் எல்லா மாவட்டக் கழகங்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் விவரங்கள், பொதுக்குழு கூட்டமுடிவுகள் முதலியன.
- சிந்தனைக்கு விருந்தளிக்கும் கதை—கவிதை, துணுக்குகள் முதலியன.

விலை 4 அணா

30-4-55-ம் நாள் எல்லா ஊர்களிலும் கிடைக்கும்

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், சோழ அச்சகம் 16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை 1.